Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 150 | திங்கட்கிழமை 25 ஏப்ரல் 2022 | சித்திரை 12 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ.40

## அதிபர், ஆசிரியர்கள் இன்று போராட்டம்!

*பிள்ளைகளின் பாதுகாப்புக்கு பெற்றோரே பொறுப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 25
இலங்கையிலுள்ள அனைத்து அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் இன்று திங்கட் 15

## வடக்கு மாகாண பரீட்சைகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25
ஆசிரியர்கள், அதிபர்கள் சுகவீன விடுப்பு போராட்டத்தை நடத்த உள்ளதனால் இன்று நடைபெறவிருந்த 15



# இலங்கையின் அரசியலில் எந்நேரமும் எதுவும் நடக்கலாம்



### சுருதியை மாற்றுகிறார் பிரதமர் மஹிந்த
### மக்கள் வீதிக்கு இறங்க தான் காரணமல்லவாம்

கொழும்பு, ஏப்ரல் 25
இலங்கை அரசியலில் எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற நிலை தற்போது உருவாகியுள்ளது. தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு நான் பொறுப்பு அல்ல – இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்று இரவு தெரிவித்தார். அதேவேளை, அரசுக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்க வேண்டிய நிலைமைக்கும் தான் காரணம் அல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டினார். 15



## கோத்தாவுக்கு பாதுகாப்பு முற்றுகைக்குள் மஹிந்த!

### வீட்டுச் சுவரில் போராட்ட வாசகங்கள்

கொழும்பு, ஏப். 25
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் அலுவலகம் அவரது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு 15

## அம்புலன்ஸுக்கும் இடம்கொடாது பொலிஸாரால் நிரந்தர வீதித் தடை

### சுற்றுலாவிகளும் பெரும் பாதிப்பு

கொழும்பு, ஏப். 25
கொழும்பில் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்போர், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம் 13

## தமிழ் ஈழ சைபர் படை இணையத் தாக்குதல்

கொழும்பு, ஏப். 25
சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 'தமிழ் ஈழ சைபர் படை' என்று தன்னை அடையாளப் 15

## விளைவுகள் விபரீதமாகும்!

### சட்டத்தரணிகள் சங்கம் பொலிஸாருக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 25
கொழும்பை அண்மித்துள்ள ஒரு சில வீதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள வீதித் தடைகளில் கூரிய ஆணி போன்ற கம்பிகளைப் பொருத்தி கறுப்பு நிற பொலித்தீனால் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக மக்களுக்கு காயங் 15



கூர்முனைகள் பொருத்தப்பட்டு கறுப்பு பொலித்தீனால் மறைக்கப்பட்ட வீதித் தடைகள்.



## எரிபொருள் வழங்கல் முடங்கும் அபாயம்!

### பிரதான எண்ணெய் விநியோக நிறுவனம் இலங்கையிடம் கட்டணம் கோரி அழுத்தம்

கொழும்பு, ஏப். 25
ஐக்கிய அரபு இராச்சியத்தை சேர்ந்த பிரதான எண்ணெய் விநியோக நிறுவனம் இலங்கைக்கு வழங்கிய எரிபொருளுக்குரிய கட்டணத்தைச் செலுத்தக்கோரி அழுத்தத்தைப் பிரயோகிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு இராச்சிய நிறுவ 10

## மின்வெட்டு குறைப்பு

கொழும்பு, ஏப். 25
மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு போதிய எரிபொருள் மற்றும் நீர் இல்லாத காரணத்தால் இன்று முதல் நாளை மறுதினம் 10

## எரிவாயு விநியோகம் புதன்கிழமை ஆரம்பம்

**6 நாள்களுக்கே நீடிக்கும்**

கொழும்பு, ஏப். 25
நாளை மறுதினம் புதன்கிழமை முதல் சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் ஆரம்பிக்க 10

### எரிபொருள் நெருக்கடியால்

## கொழும்பு துறைமுகத்தில் தேங்கும் பொருள்கள்

கொழும்பு, ஏப். 25
எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கொழும்பு துறைமுகத்தில் ஏற்றுமதி -இறக்குமதி உள்ளிட்ட போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஐக்கிய இலங்கை கொள்கலன் 10

## பணவருகை அதிகரிப்பு மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 25
இலங்கைக்கான வெளிநாட்டு நாணய பரிமாற்றத்தின் முக்கிய ஆதாரங்களில் ஒன்றான இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பணம் கடந்த மார்ச் மாதத்தில் சிறிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. பெப்ரவரியில் 205 மில்லியன் அமெரிக்க டொல 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசாங்கத்துக்கு எதிராக திரண்டனர் மாணவர்கள்!

**கொழும்பு, ஏப். 25**

**ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்தனர்.**

'இளைஞர்களின் கனவுடன் இறுதி ஊர்வலம்' என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்தில் மாணவர்கள் மலர் வளையத்துடன் பேரணி நடத்தினர்.

அத்துடன் சவப்பெட்டியையும் மாணவர்கள் ஏந்திச் சென்றனர். எந்தக் காரணங்களையும் முன்வைக்காது, சாக்குப்போக்குகளைச் சொல்லாது அரசாங்கம் உடனடியாகப் பதவி விலகவேண்டும், பொதுமக்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வாழ்க்கைச் சுமையைக் குறைக்கவேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள். (எ-இ)

## மஹிந்தவை கைகழுவும் ஆளுங்கட்சி எம்.பிக்கள்

கொழும்பு, ஏப். 25

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத்தும், பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ச விலகவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் மஹிந்த ராஜபக்ச பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தும் நிலையில், தற்போது சரித ஹேரத்தும் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பிரதமர் பதவியில் இருந்து எந்த அழுத்தத்துக்காகவும் விலகமாட்டேன் என்றும், இடைக்கால அரசு அமைக்கப்பட்டால் அதிலும் தானே பிரதமர் என்றும் மஹிந்த ராஜபக்ச நேற்றுமுன்தினம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)




ஜனாதிபதி மற்றும் ஆட்சியாளர்களுக்கெதிராக பதுளையில் நேற்றுமுன்தினம் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் வர்த்தக நிலைய உரிமையாளர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ய)



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகோரி திருகோணமலை-தம்பலகாமம் சிவில் சமூகத்தினரால் தம்பலகாமம் பகுதியில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-14)

## நாளாந்தம் எரிவாயு விற்பனையில் 250 மில். ரூபா இழப்பு

கொழும்பு, ஏப். 25

சந்தைக்கு குறைந்த விலையில் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிப்பதால் நாளாந்தம் சுமார் 250 மில்லியன் ரூபா வருமானம் இழக்கப்படுவதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

லிட்ரோ நிறுவனம், எரிவாயு விலையை 5 ஆயிரத்து 175 ரூபாவாக அதிகரித்த நிலையில் அந்த விலையில் விற்பனை செய்யக்கூடாது என அரசு அறிவுறுத்தியுள்ளது. இந்த நிலையிலேயே லிட்ரோ நிறுவனம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

இதேவேளை- 7 ஆயிரத்து 200 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய மேலும் இரண்டு கப்பல்கள் 26 மற்றும் 28ஆம் திகதிகளில் நாட்டுக்கு வரவுள்ளன. எரிவாயு கிடைத்த மறுதினமே சந்தைக்கு விடப்படும் என்று லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவரான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-14)



## போராட்டக்காரர்களைத் தடுக்க அமைக்கப்பட்டது இரும்பு வேலி

கொழும்பு, ஏப். 25

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தை அறிவித்துள்ள நிலையில், கொழும்பில் பிரதான இடங்களுக்குச் செல்லும் வீதிகளில் நேற்று இரும்புத் தடுப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்த வீதிகள் வழியாகப் பயணித்த வாகனங்கள் வேறு வீதிகளுக்குத் திருப்பி விடப்பட்டுள்ளன.

நடந்து செல்வோர்கூடச் செல்ல முடியாதவாறு நிரந்தரத் தடுப்புக்கள் இரும்புக் கம்பிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டை, யோர்க் வீதி, வங்கி வீதி ஆகிய ஜனாதிபதி செயலகத்துக்குச் செல்லும் வீதிகளில் பல இரும்புத் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு பொலிஸாரும் பெரும் எண்ணிக்கையில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (எ-இ)

# விலையேற்றத்துக்கு எதிராக வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஏப். 25

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்து, வவுனியா - ஈஸ்வரிபுரத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஈஸ்வரிபுரம் மாதர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் அயல் கிராமங்களைச் சேர்ந்த மக்களும் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், 'கட்டுப்பாட்டு விலையைக் கொண்டுவா', 'கோத்தா, மஹிந்த அரசே ஆட்சியைவிட்டு வெளியேறு', 'போராடும்மக்களைச்சுட்டுக்கொல்லாதே' உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியிருந்தனர். அத்துடன் அரசாங்கத்துக்கு எதிராகக் கோஷங்களையும் எழுப்பினார்கள். (ம-க-110)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலைக்குத் தீர்வுகிட்ட பிரான்ஸின் அழுத்தம் அவசியம்

## யாழ். மாநகர முதல்வர் கோரிக்கை



**யாழ்ப்பாணம், ஏப். 25**

**இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக ஓர் இனப்படுகொலை நடந்தேறியுள்ளது. இதற்கு நீதியான தீர்வொன்றைப் பெற்றுத்தருவதற்கு பிரான்ஸ் அரசாங்கம், இலங்கைக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுப்பதுடன், ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டுமென்று யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.**

பிரான்ஸ் டெரன்ஸி மாநகர சபையின் முதல்வர், பிரான்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

யாழ். மாநகர முதல்வர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்கு உதவ முன்வருகின்ற நாடுகள் மற்றும் அமைப்புக்கள், தமிழர்களின் உரிமைசார் பிரச்சினைகளுக்கும் நீதியைப் பெற்றுத்தரும் வகையில் அழுத்தங்களைக் கொடுத்து. இலங்கையில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்போமென்று இலங்கை அரசாங்கம் உறுதியளிக்கும் பட்சத்தில் மட்டுமே இலங்கைக்கான நிதியுதவியை வழங்கவேண்டும். எதிர்காலத்தில் யாழ்.மாநகர சபையுடன் இணைந்து டெரன்ஸி மாநகர சபை பணியாற்றவேண்டும். போரால் அழிவுற்ற தமிழ் மக்களின் பொருளாதாரத்தையும், வாழ்வாதாரத்தையும் கட்டியெழுப்ப உதவ வேண்டும் - என்றார்.

இதன்போது டெரன்ஸி மாநகர முதல்வர் தெரிவிக்கையில்;

இலங்கையில் நடந்தது ஓர் இனப்படுகொலை என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.

டெரன்ஸி மாநகர சபையில் அது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கான அழுத்தங்களைக் கொடுப்போம் - என்றார். (ம-க-125)

## பட்டப்பகலில் சங்கிலி அறுப்பு

வவுனியா, ஏப். 25

பட்டப்பகலில் வர்த்தக நிலையத்துக்குள் புகுந்து பெண்ணொருவரின் தங்கச்சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் வவுனியா, யாழ். வீதியில் புதிய பேருந்து நிலையத்துக்கு அருகிலுள்ள வர்த்தக நிலையத்தில் நேற்று நடந்துள்ளது.

வர்த்தக நிலையத்துக்குச் சென்ற இளைஞர் ஒருவர் அங்கு நின்ற பெண்ணை அழைத்து முகவரி கேட்பது போல் பாசாங்கு செய்து, குறித்த பெண் அணிந்திருந்த இரண்டரைப் பவுண் தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பியோடியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (க-18)

## குடும்பத்தலைவரை அச்சுறுத்தி சிலிண்டர், பணம் கொள்ளை!

### *சில மணித்தியாலங்களில் ஒருவர் கைது*

யாழ்ப்பாணம், ஏப். 25

எரிவாயு சிலிண்டரைக் கொண்டு சென்ற குடும்பத்தலைவரை வழிமறித்து, சிலிண்டர் மற்றும் பணத்தைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றவர்களில் ஒருவர் சில மணித்தியாலங்களில் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைதானவரிடமிருந்து எரிவாயு சிலிண்டர் மற்றும் 25 ஆயிரம் ரூபா பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

குடும்பத்தலைவரை வீதியில் மறித்த நால்வர் தம்மை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் என்று கூறி, அவரை மிரட்டி, எரிவாயு நிரப்பிய சிலிண்டர் மற்றும் பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றனர்.

பாதிக்கப்பட்டவரால், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதனடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவம் இடம்பெற்று சில மணித்தியாலங்களில் கந்தர்மடத்தைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து எரிவாயு நிரப்பட்ட சிலிண்டர் மற்றும் 25 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டன. ஏனைய மூவரும் தேடப்படுகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-26)

# பதவியிழந்த அமைச்சர்களின் பாதுகாப்பு நீக்கப்படவில்லை

கொழும்பு, ஏப். 25

அமைச்சுப் பதவிகளை இழந்த முன்னாள் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்ட அமைச்சுப் பாதுகாப்பு இன்னும் நீக்கப்படவில்லை என்று அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் அமைச்சர்கள் பயன்படுத்திய வாகனங்களை இதுவரை கையளிக்கவில்லை என்றும் அமைச்சர்களில் பெரும்பாலானோர் இன்னும் அரசாங்க வீடுகளில் வசிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-14)




**அரசாங்கம் ஒருபக்கம் பெற்றோல், டீசலின்ர விலையைக் கூட்டிக்கொண்டே போகுது. மற்றப்பக்கம் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெயை கண்ணாலையும் காண ஏலாமல் கிடக்கு. எல்லாப் பெற்றோல் செற்றுகளிலையும் முன்னால கயிறு கட்டி, 'ஒரு எரிபொருளுமில்லை, உள்ளுக்க வரவேண்டாம்' எண்டு சொல்லாமல் சொல்லுகினம்.**

**அத்திபூத்த மாதிரி எப்பவாவது இருந்திட்டுத்தான் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் பவுஸருகள் வருகுது. அப்பிடி செற்றுக்கு எரிபொருள் வந்ததை அறிஞ்சால் அனுமர் வால்மாதிரி பெரிய கியூவில மணித்தியாலக் கணக்கில நிண்டுதான் பெற்றோலோ, டீசலோ அடிக்கவேண்டியிருக்கும். மண்ணெண்ணெய் எண்டால் கியூவில நிக்கிறதோட குடும்பக் கார்ட்டும் கொண்டு போகோணும். இப்பிடியெல்லாம் எரிபொருள் வாங்கிறதே பெரிய சில்லெடுப்பா மாறிக்கிடக்கேக்க, சனத்தை இன்னும் கஷ்டப்படுத்துற மாதிரி சில பெற்றோல் செற்காரரும் நடக்கினம் கண்டியளோ.**

**இப்ப பகலும், இரவும் கரண்டை குறிப்பிட்ட சில மணித்தியாலத்துக்கு கட் பண்ணுறாங்கள். பெற்றோல் அடிக்க கியூவில நிக்கேக்க, கரண்ட் கட் எண்டால் கதை அவ்வளவுதான். தனியார் பெற்றோல் செற்றுகளில பெரும்பாலும் ஜெனரேட்டர் வைச்சிருக்கினம். அதால அவை கரண்ட் கட் எண்டால் உடன ஜெனரேட்டரைப் போட்டு, பெற்றோலைக் குடுப்பினம். ஆனால் கூட்டுறவுச் சங்கங்கள் வைச்சிருக்கிறகன செற்றுகளில அப்பிடி ஜெனரேட்டர் போடுற வாடிக்கை இல்லை எண்டு சனம் ஒரே குறை. போன வெள்ளிக்கிழமை இப்பிடித்தான், நெல்லியடியில கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான செற்றில பெற்றோல் குடுபட்டது. சனமெண்டால் நல்லூர்த் தேர்த்திருவிழாவுக்கு வந்தமாதிரி குவிஞ்சு போய் நிண்டிச்சுதுகள். வடமராட்சியில வேற செற்றுகளில பெற்றோல் இல்லையெண்டதால, அங்கதான் அடிக்க வேண்டிய நிலை. அதால ஊரிப்பட்ட சனம்.**

**பொழுதுபட ஆறு மணிக்கு கரண்ட் கட்டாப் போச்சு. பிறகு ஏழரைக்குத்தான் வரும். சரி, 'இஞ்சினைப் போட்டு பெற்றோல் தருவினம் தானே' எண்ட நினைப்பில சனங்கள் அசையாமல் அங்கையே நிண்டிச்சினம். ஆனால் சங்கக்காரருக்கு இஞ்சினைப் போடுற நினைப்பே இல்லை. ஒருவேளை அவையிட்ட ஜெனரேட்டர் இல்லையோ தெரியேலை. அப்பிடி இல்லாட்டி இப்பிடி கரண்ட் கட்டாகும் எண்டு தெரிஞ்சால் எங்கையாவது எடுத்து வைச்சிருக்கவாவது வேணுமெல்லோ. அப்பிடி எந்த யோசனையும் இல்லாமல், ஒண்டரை மணித்தியாலமும் சனங்கள் அப்பிடியே நிக்க, பிறகு கரண்ட் வந்த பிறகுதான் அங்க பெற்றோல் அடிபட்டிருக்கு. இஞ்சினை போட்டு பெற்றோலைக் குடுத்திருந்தால், சனங்கள் இப்பிடி எல்லா வேலையளையும் விட்டிட்டு செற்றில ஒண்டரை மணித்தியாலம் தவமிருக்கத் தேவையில்லையெல்லோ. அதுக்காக எல்லா கூட்டுறவுச் சங்க செற்றுகளும் அப்பிடி எண்டில்லை. ஒண்டிரண்டு செற்றுகள் இப்பிடி சனங்களைப்பற்றி யோசிக்காததால எல்லா செற்றுக்கும் தானே கெட்டபேர்.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிக்கடிமாறும் கல்வி அமைச்சரால் நிரந்தரக் கல்விக்கொள்கை ஏற்படாது

## இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு போராட்டம் நடத்துவதற்கும் திட்டம்!

கொழும்பு, ஏப். 25

**கல்வி அமைச்சர் அடிக்கடி மாற்றப்படுவதால், நிரந்தரமான ஒரு கல்விக் கொள்கையை ஏற்படுத்தமுடியாத அபாயகரமான நிலைமையை நாடு எதிர்கொண்டுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.**

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளரும், மட்டக்களப்பு மாவட்டச் செயலருமான பொன்.உதயரூபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த அரசு மாணவர்களின் கல்வி தெடர்பாக அக்கறையற்றுள்ளது. மின்சார நெருக்கடி காரணமாக மாணவர்கள் பல இன்னல்களுக்கு மத்தியில் தங்கள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தூரப் பிரதேசங்களுக்குப் பயணம் செய்து கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் பல இன்னல் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் கல்வி அமைச்சுக்கு எந்தவித உரியபதிலும் வழங்கப்படவில்லை. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் மூன்று கல்வி அமைச்சர்கள் மாற்றப்பட்டுள்ளனர். நாட்டில் சிறந்த கல்விக் கொள்கை இல்லாத காரணத்தால்தான் இத்தகைய பிரச்சினைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. நாட்டில் தற்போது நிலவும் மின்தடை, எரிபொருள் பிரச்சினைக்கு தீர்க்கமான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் இலங்கை ஆசிரியர் சங்கம், அதிபர் கூட்டணி மற்றும் இலங்கை ஆலோசகர் சங்கத்துடனும் இணைந்து இன்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும் -என்றார். (க-150)



# எறிகணை மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 25

இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாரீசன் கூடலில் நேற்றுக்காலை வெடிக்காத நிலையில் எறிகணை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

காணியில் சந்தேகத்துக்கு இடமான பொருள் ஒன்றை அவதானித்த காணி உரிமையாளர் அது தொடர்பில் அருகிலுள்ள கடற்படையினர் முகாமுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பாக கடற்படையினர் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். சம்பவ இடத்துக்குச் சென்ற இளவாலைப் பொலிஸார், எறிகணையை நீதிமன்ற அனுமதியுடன் செயலிழக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். (எ-125)



# கண்ணிவெடி அகற்றும் பகுதிகளை பார்வையிட்ட அமெரிக்க குழுவினர்

கிளிநொச்சி, ஏப். 25

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சார்ப் நிறுவனத்தின் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பணிகளை அமெரிக்கத் தூதரகக் குழுவினர் அண்மையில் பார்வையிட்டனர். நிறுவனத்தால் தற்போது முன்னெடுக்கப்படும் கண்ணிவெடி அகற்றும் பகுதிகளுக்கு களப்பயணத்தை மேற்கொண்ட தூதுக்குழுவினர், நிறுவனத்தின் பிரதிநிதிகளிடம் களநிலவரங்களைக் கேட்டறிந்தனர்.

இரண்டு மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் வேலைத்திட்டங்களுக்கு போதிய நிதியை வழங்குவதாக குழுவினர் உறுதியளித்தனர்.

தூதுக்குழுவினருடன் நிறுவனத்தின் பொது முகாமையாளர் மற்றும் நடவடிக்கை முகாமையாளர் ஆகியோரும் சென்றிருந்தனர். (க-6)

# செயல்முறைப் பரீட்சை ஏப்ரல் 29 இல் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 25

2021ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையின் செயல்முறைப் பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாடகம் மற்றும் கலைப் பாடத்துக்கான செயல்முறைப் பரீட்சைகள் ஏப்ரல் 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்துள்ளார். மேலும் தகவல் தொழில்நுட்பப் பாடம் தொடர்பான செயல்முறைப் பரீட்சைகள் விரைவில் நடத்தப்படும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-14)

# சுகாதாரத்துறை கடும் ஆபத்தில்

## தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 25

இலங்கையில் மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருள்களுக்கான தட்டுப்பாட்டால், சுகாதாரத்துறை கடுமையான ஆபத்தை எதிர்கொண்டுள்ளது என்று இலங்கையின் சுகாதாரப் பாதுகாப்பு தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குள் கடனைச் செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே சுகாதாரத்துறைக்கு மனிதாபிமான உதவிகள் அவசியம் என்று மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். (க-இ)



பிரமந்தனாறு ஆண்டவர் ஆலய இறை இரக்க திருவிழா நேற்று இடம்பெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் இந்தத் திருவிழா ஒப்புக் கொடுக்கப்பட்டது. (ம-14-113)

# நெருக்கடிகளைத் தீர்க்க புதிய நிர்வாகமே தேவை

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

புதிய நிர்வாகத்தால் மட்டுமே நாட்டில் நிலவும் நெருக்கடிகளைத் தீர்க்க முடியும் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளதாவது:-

அமைச்சுப் பதவிகளை மாற்றுவதன் ஊடாக இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது. ஒரு குழுவினர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவியில் நீடிக்க வேண்டும் என்றும், ஒரு பகுதியினர் மஹிந்த ராஜபக்ச பதவியில் நீடிக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுக்கின்றனர். இப்படியான நிலைமையில் எவ்வாறு அரசு செயற்பட முடியும்?

இந்த நிலைமை காரணமாகவே தற்போதைய நிர்வாகத்துக்கு உதவ எந்தவொரு சர்வதேச அமைப்பும் தயாராக இல்லை. அனைத்துக் கடனாளிகளிடமிருந்தும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான நீடிப்பை அரசு பெறும் பட்சத்தில் மட்டுமே சர்வதேச நாணய நிதியம் தலையிட்டு உதவிகளை வழங்கும்.

சர்வதேச நாணய நிறுவனத்தின் உதவி கிடைத்தவுடன் அனைத்துப் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் 40 சதவீதம் அதிகரிக்கும். உதவி வழங்கிய பின்னர் அதைத் திருப்பிச் செலுத்த முடியுமா என்றும் சர்வதேச நாணய நிதியம் ஆராயும். இந்த அரசு நாட்டை உதவிக்காக கெஞ்ச வேண்டிய நிலைக்கு தள்ளியுள்ளது -என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு மின் வழங்க தமிழகத்தில் கடும் எதிர்ப்பு

**கொழும்பு, ஏப். 25**

**இலங்கைக்கு செய்யப்படும் உதவிகள் ஒருபோதும் இந்தியாவுக்கு எதிராக அமைந்துவிடக்கூடாது. அதனால் கடல்வழி மின்தடம் அமைக்கும் திட்டத்தை கைவிடவேண்டுமென்று தமிழகத்தின் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைக்கு மின்சாரம் வழங்குவதற்கு வசதியாக தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு கடலுக்கடியில் மின்பாதை அமைக்கும் திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன என்று வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டால் அது நாட்டின் வளர்ச்சியைப் பாதிக்கும் என்பதை அரசு உணர வேண்டும். இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை இலங்கைக்கு கொண்டு செல்வதற்கு வசதியாக மதுரையிலிருந்து இலங்கையின் அநுராதபுரம் பகுதிக்கு கடல் வழியாக மின்பாதை அமைக்கும் திட்டம் நீண்ட காலமாக இரு நாடுகளின் பரிசீலனையில் இருந்து வருகிறது. 2000ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்தத் திட்டத்தை செயற்படுத்த முயற்சிகள் நடந்தபோது, அதற்கு தமிழகத்தில் கடுமையான எதிர்ப்பு எழுந்தது. அதனால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. அதன்பின் 2010ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இந்தியா-இலங்கை இடையே மின்சாரக் கோபுரங்களை அமைத்து மின்சாரத்தைக் கொண்டு செல்வதற்கு திட்டமிடப்பட்டது. ஆனால், அந்தத் திட்டமும் தமிழ்நாட்டின் ஆதரவு இல்லாததால் கிடப்பில் போடப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளில் இருமுறை கைவிடப்பட்ட இந்தியா-இலங்கை மின்பாதை திட்டத்தை மீண்டும் செயற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே பேச்சுகள் தொடங்கியுள்ளன. அவை தொடக்க நிலையில் இருப்பதாகவும் இலங்கை அரசின் மின்துறை செயலாளர் வசந்த பெரேரா தெரிவித்துள்ளார். இந்த முயற்சி பொதுவாக இந்திய நலனுக்கும், குறிப்பாக தமிழகத்தின் வளர்ச்சிக்கும் பாதகமாக அமையும் என்பதே உண்மை -என்றுள்ளது. (எ-இ)

## சவர்க்காரங்களின் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 25

சவர்க்காரங்களின் விலையை சடுதியாக அதிகரிக்க சவர்க்கார இறக்குமதி நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன. அதற்கமைய, 70 ரூபாவுக்கு விற்பனை செய்யபட்ட ஆடைகளைக் கழுவும் சவர்க்காரத்தின் விலை 115 ரூபா தொடக்கம் 150 ரூபா வரையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கான சவர்க்காரம் 175 ரூபாவாகவும், வாசனை சவர்க்காரம் 145 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சலவைத் தூள்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சம்போ மற்றும் பற்தூரிகை என்பவற்றின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## சர்வதேச விசாரணையின் அவசியத்தை சிங்களவர்கள் தற்போது உணர்வார்கள்

### மக்கள் எழுச்சிக் கட்சியின் தலைவர் அருள் ஜெயந்திரன் இவ்வாறு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25

தமிழ் மக்கள் சர்வதேச விசாரணை கேட்பதன் அவசியத்தை சிங்கள மக்கள் தற்போது உணர்வார்கள்.

-இவ்வாறு தெரிவித்தார் அகில இலங்கை மக்கள் எழுச்சிக் கட்சியின் தலைவர் அருள் ஜெயந்திரன்.

கொக்குவிலிலுள்ள அகில இலங்கை மக்கள் எழுச்சிக் கட்சியின் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக ஜனாதிபதி கோத்தாபய தலைமையிலான அரசைப் பதவி விலகவேண்டும் என்று சிங்கள மக்கள் போராடி வருகின்றனர். ஜனநாயகப் போராட்டங்களை அடக்குவதற்காகவும் போராட்டங்களில் கிளர்ச்சியை ஏற்படுத்தி அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவும் அரசு பல உத்திகளைப் பயன்படுத்தி வருகின்றது. ரம்புக்கனையில் இடம் பெற்ற போராட்டத்தின்போது துப்பாக்கிப்பிரயோகம் நடத்தப்பட்டமையும் அதற்காகத்தான்.

மக்களின் ஜனநாயகப் போராட்டத்தை ஆயுத முனையில் அடக்குவதற்குப் பல்வேறு முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போரின்போது பலர் கொல்லப்பட்டனர். அப்போது மௌனமாக இருந்த சிங்கள மக்கள் அரசின் தற்போதைய அராஜகங்களுக்கு எதிராகக் குரல்கொடுத்து வருகின்றனர்.

உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுக்கான பின்புலம் தற்போது வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்துத்தான் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். அவர், இந்தத் தாக்குதலின் சூத்திரதாரிகள் யார்? என்பதையும் வெளிப்படுத்த வேண்டும் -என்றார். (ம-20)

## எதிர்வரும் மூன்று வருடங்களில் அனைவருக்கும் சுத்தமான நீர்!

### ஜனாதிபதி கோத்தாபய தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25

எதிர்வரும் மூன்று வருடங்களில் அனைவருக்கும் சுத்தமான நீர், சுகாதாரம் மற்றும் நீர் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதே அரசின் தேசிய இலக்கு என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட 4ஆவது ஆசிய பசுபிக் நீர் உச்சி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட நிதி நெருக்கடியால் வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு தடைப்பட்டது. இருப்பினும் கடந்த இரு வருடங்களில் பங்கேற்பு அபிவிருத்திக் கோட்பாட்டைப் பயன்படுத்தி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கினோம். இந்த நிலையில் தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் கொள்ளளவையும் தரத்தையும் மேம்படுத்தி, நாடு முழுவதும் புதிய திட்டங்களை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது -என்றார். (ம-14)

## நாடாளுமன்றில்

## வாய்மூல விடைக்கான வினாக்கள் மட்டுப்பாடு

நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய்மூல விடைகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கும் வினாக்களை ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்குவதில் புதிய நடைமுறை பின்பற்றப்படும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பின்வரிசை உறுப்பினர்கள் வாய்மூல விடைகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கும் வினாக்கள், நாடாளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படும்போது, தற்போது பின்பற்றப்படுகின்ற முறைமை காரணமாக நாடாளுமன்ற அமர்வுகள் நடத்தப்படுகின்ற அனைத்து நாள்களிலும் ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே வினாக்களைக் கேட்பதற்கான வாய்ப்புக் கிடைப்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற சபா மண்டபத்திலும், தனிப்பட்ட முறையிலும் சபாநாயகரிடம் முன்வைத்த எழுத்துமூல மற்றும் வாய் மூலமான கோரிக்கைகள் தொடர்பில் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டங்களில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. அதற்கமைவாக மே மாதத்தின் முதலாவது நாடாளுமன்ற அமர்வு தொடக்கம் இந்தப் புதிய நடைமுறை செயற்படுத்தப்படும் -என்றார். (க-இ)

# நாணய நிதிய விவகாரம்; நாடாளுமன்றில் ஆராய்வு

சர்வதேச நாணய நிதியத்துக்கும், நிதிய மைச்சர் அலி சப்ரி தலைமையிலான பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சில் முன்னேற்றம் குறித்து அமைச்சரின் அறிவிப்புக்களின்கீழ், எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதி நாடாளுமன்றில் கலந்துரையாடப்படும் என்று நாடாளுமன்றச் செயலாளர் தம்மிக்க தசநாயக தெரிவித்தார்.

எதிர்வரும் மே மாதம் 4, 5 மற்றும் 6ஆம் திகதிகளில் நாடாளுமன்றம் கூடவுள்ளது. 6ஆம் திகதி தவிர இரண்டு நாள்களிலும் முற்பகல் 10 மணி முதல் 11 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. 5ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்றம் கூடவிருப்பதுடன் அன்றைய தினத்துக்கான தினப்பணி [illegible] தல் சட்டவரைவு [illegible] வுள்ளது. அதனைத் தொடர்ந்து அரசால் கொண்டு வரப்படும் பிரேரணைக்கு அமைய, நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அரசுப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கை (கோப்குழு) தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் முற்பகல் 11 மணி முதல் மாலை 5.30 மணிவரை நடைபெறும். 6ஆம் திகதி [illegible] மணி முதல் மாலை 5.30 மணிவரை மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தொடர்பான அனுதாபப் பிரேரணைகள் விவாதத்துக்கு எடுக்கப்படும். அத்துடன், இதுவரை சபாநாயகருக்குக் கிடைக்கப்பெற்றுள்ள அரசமைப்பும் திருத்தம் தொடர்பான பரிந்துரைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக, நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு உறுப்பினர்களின் கூட்டத்தை எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கூடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண மீனவருக்கு தரையிலும் கடலிலும் சவால்

## கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின் சம்மேளனம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 25

**இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் நிலையில், மீனவர்கள் கடலிலும், தரையிலும் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.அன்னராசா தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழகத்தில் தற்போது மீன்பிடித் தடைக் காலம் என்பதால் எமது பகுதிகளுக்குள் வருவது நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால், தடைக்காலம் முடிந்தவுடன் அவர்கள் எமது பகுதிக்குள் வருவதை இலங்கை அரசும், இந்தியத் தூதரகமும் தடுக்க வேண்டும்.

இராஜதந்திரப் பேச்சு ஊடாகவே எல்லை தாண்டும் இந்திய மீனவர்களைத் தடுக்க முடியும். தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்திருக்கின்றோம். ஆனால், தமிழக முதல்வர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்திய இழுவைப் படகுகளால் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் பல ஆண்டுகளாக அழிக்கப்பட்டு வருகின்றது.

> **“ இந்திய இழுவைப் படகுகளால் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் பல ஆண்டுகளாக அழிக்கப்பட்டு வருகின்றது. தற்போது மீன்பிடிப் படகுகளுக்கான மண்ணெண்ணெய் கிடைப்பது சவாலான விடயமாக மாறியுள்ளது. ”**

தற்போது மீன்பிடிப் படகுகளுக்கான மண்ணெண்ணெய் கிடைப்பது சவாலான விடயமாக மாறியுள்ளது. வாரத்தில் ஒரு தடவை மட்டுமே மண்ணெண்ணெய் வழங்கப்படுகின்றது.

நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு பிரதேசங்களிலுள்ள கடற்றொழிலாளர்கள் ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, வேலணை ஆகிய இடங்களுக்கே மண்ணெண்ணெய் எடுக்க வர வேண்டும்.

தற்போது பஸ் கட்டணங்கள், படகுக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், மண்ணெண்ணெய் பெறுவதற்கு பெரும் தொகையைச் செலவழிக்க வெண்டியுள்ளது. அந்தச் செலவுக்கு ஈடு கொடுக்கும் வகையில் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதில்லை -என்றார். (ஏ-20)

# நிர்வாகத் தெரிவு

கொடிகாமம், ஏப். 25

கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தின் 2022ஆம் ஆண்டுக்கான பழைய மாணவர் சங்கப் புதிய நிர்வாகத் தெரிவு இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது பழைய மாணவர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-159)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

கொடிகாமம், ஏப். 25

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் அல்லையம்பதி சிவ சுப்பிரமணிய ஆலயத்தில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ராம் சபாநாதக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ச-159)

# மரக்கறி நாற்றுகள் வழங்கும் நிகழ்வு

கொடிகாமம், ஏப். 25

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு மரக்கறி நாற்றுகள் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச-159)

### வடமராட்சி கிழக்கு

# ப.நோ.கூ. சங்கத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப். 25

வடமராட்சிகிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குப் புதிய நிர்வாகம் நேற்றுமுன்தினம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது புதிய தலைவராக த.தங்கரூபன் தெரிவு செய்யப்பட்டார். அவருடன் சேர்ந்து ஆறு இயக்குநர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் கடந்த காலங்களில் சங்கத்தில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் மோசடிகள் தொடர்பில் விசாரணைக் மேற்கொள்ள பொதுச்சபை உறுப்பினர் இ.முரளீதரன் தலைமையில் ஐவர் கொண்ட விசாரணைக் குழுவும் நியமிக்கப்பட்டது. (க-113)



# பெரும் பள்ளங்களுடன் வட்டு. காரைநகர் வீதி

யாழ்ப்பாணம், ஏப்.25

வட்டுக்கோட்டை- காரைநகர் வீதி பெரும் பள்ளங்களுடன் காணப்படுவதால், வீதியூடான போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. 786 வழிப் பேருந்துகள் இந்த வீதியூடாகவே பயணிக்கின்றன. வீதி சேதமடைந்திருப்பதால், வாகனச் சாரதிகள் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அடிக்கடி விபத்துக்களும் ஏற்படுகின்றன. எனவே வீதியைச் சீர் செய்து போக்குவரத்தை இலகுபடுத்த வேண்டும் என்று அந்த வீதியூடாகப் பயணிப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

# பாராட்டு விழா

சாவகச்சேரி, ஏப். 25

அராலி மெஞ்ஞான வைரவர் ஆலய தர்மகர்த்தா கலாநிதி ஐயாத்துரை கண்ணாவினைக்கு கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டமைக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அராலி கிழக்கு ஐயனார் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவருக்கு உலகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் பாரம்பரிய மருத்துவத் துறைக்காக கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சித்த வைத்திய சிரோன்மணி செ.பரமசிவன்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார். (ச-131)

# வாடிக்கையாளர் ஒருவருக்கு சதொசவில் 5 கிலோ அரிசி

கொழும்பு, ஏப். 25

வாடிக்கையாளர் ஒருவர் அதிகபட்சம் 5 கிலோ கிராம் அரிசியை சதொசவில் கொள்வனவு செய்ய முடியும் என்று வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட 40 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி சதொச விற்பனை நிலையங்களின் ஊடாக விநியோகிக்கப்படுகின்றது.

அதற்கமைவாக ஒரு கிலோ கிராம் நாட்டரிசி 145 ரூபாவுக்கும், சிவப்பரிசி ஒரு கிலோ கிராம் 145 ரூபாவுக்கும் ஒரு கிலோ சம்பா அரிசி 175 ரூபாவுக்கும் சதொச ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (கு-இ)

# மன்னார் சமகால நிலைவரம் பொது அமைப்பினரால் ஆராய்வு

மன்னார் மாவட்டத்தில் சமகால நிலைவரம் தொடர்பில், கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேரடியாக ஆராய்ந்தனர்.

தேசிய சமாதான பேரவை நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெகன் பெரேரா மற்றும் தேசிய சமாதான பேரவைத் தலைவரும் சமாதான தொடர்பாடல் பயிற்சி நிலையப் பணிப்பாளருமான கலாநிதி ஜோன் வில்லியம் ஆகியோர் நட்பு ரீதியான கலந்துரையாடலை நேற்று முன்தினம் நடத்தினர். (க-60)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கிளர்ச்சிகள் தோன்றும் காலம்


எரிபொருள் மற்றும் கோதுமை மா என்பனவற்றின் விலை அதிகரிப்புக்களைத் தொடர்ந்து அனைத்து வகையான பொருள்களின் விலைகளும் மீண்டுமொருமுறை சடுதியாக உயர்ந்துள்ளன. இலங்கையில், மக்களின் வேதனங்களைத்தவிர அனைத்தும் உயர்ந்துள்ளன. விலை உயர்வு மாத்திரமல்லாது பொருள்களுக்கான தட்டுப்பாடும் மக்களை பெரும் பாடாய்ப்படுத்துகின்றது.
சாமானியனின் இந்த நெருக்கடியை எந்தவொரு அரசியல் தரப்பும் உணர்வதாக இல்லை. அன்றாட வாழ்வை நகர்த்திச் செல்வதே பெரும்பாடாக இருக்கின்றது. அடுத்தவேளை உணவுக்கு என்ன செய்வது என்ற சாமானியனின் ஏக்கத்துக்கு விடை கொடுப்பார் யாருமில்லை. ஆட்சியில் இருக்கின்ற ராஜபக்சக்களாகட்டும், பிளவுண்டுள்ள எதிரணியாகட்டும் இது தொடர்பில் கரிசனை செலுத்துவதாக இல்லை. 'மக்கள் படுகின்ற கஷ்டங்கள் எங்களுக்குத்தெரியும்' என்ற ஜனாதிபதி கோத்தாபயவினதோ, மஹிந்தவினதோ பேச்சுக்கள் சாமானிய மக்களின் வாழ்க்கைக்கு விடிவு கொடுக்கப்போவதில்லை. அதேபோன்று, 'எங்களிடம் ஆட்சியை ஒப்படைத்தால் பாலும் தேனும் ஓட வைப்போம்' என்ற எதிரணிகளின் வார்த்தைகளும் அன்றாட வாழ்வை ஓட்டத் தவிக்கும் பாமரனுக்கு கைகொடுக்காது.

இந்த நிதர்சனங்களை எல்லாம் புறந்தள்ளியவர்களாக, வேற்றுக் கிரகத்தில் வாழ்பவர்கள் போன்று நடக்கின்றனர் அரசியல்வாதிகள்.
'கெடுகிறன் பந்தயம் பிடி' என்ற முதுமொழி உண்டு. அந்த முதுமொழிக்கு வடிவம் கொடுக்கின்ற வகையில் தான் இலங்கை அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.
நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படத் தான்வேண்டும். நாட்டைக் கொள்ளையடித்த ராஜபக்சக்கள் ஆட்சியிலிருந்து அகற்றப்படத்தான்வேண்டும். ஆனால், இவை எல்லாம் இப்போது நடந்தால் சாமானியனின் அன்றாட வாழ்வாதாரம் மீண்டுவிடுமா? அல்லது விலை உயர்வு குறையுமா? பொருள்களின் தட்டுப்பாடு நீங்குமா? சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடைவதால் மந்திரத்தால் மாங்காய் வீழ்ந்து எல்லாமே நொடியில் சரியாகிவிடும் என்று எவரும் மனப்பால் குடிக்க முடியாது. இப்போதுள்ள நிலைமையில் சிறிய முன்னேற்றம் வரலாம். அதுவும் இலங்கை போன்ற நாட்டில் அரசியல் உறுதிப்பாடு இல்லாமல் அதுவும் சாத்தியமில்லை. அப்படியானால் நாட்டு மக்களின் கதிதான் என்ன? இதைப்பற்றி சிந்திப்பதற்கு எந்தவொரு அரசியல் தரப்புக்கும் நேரமும் இல்லை, மனமும் இல்லை.

ஆட்சியை எப்படிப் பிடிப்பது என்று ஒரு தரப்பும், இந்த ஆட்சியைத் தக்க வைப்பது எப்படி என்று இன்னொரு தரப்பும் கயிறு இழுவை நடத்துகின்றனவே தவிர, பாமரனின் கழுத்திலுள்ள சுருக்குக் கயிற்றை அவிழ்க்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடத்தே இல்லை. இப்போதைய நிலையில் ஆளும் தரப்புக்கு முட்டுக் கொடுத்து பொருளாதாரத்தை மீட்டெடுத்தால், அந்த நற்பெயரை ஆளுங்கட்சியினர் சுருட்டிக்கொண்டு விடுவார்கள் என்ற எண்ணத்தில் எதிர்க்கட்சி ஒத்துழைக்க மறுக்கின்றது. பொருளாதார மீட்சியை கொடுக்காது விட்டால் எப்போதும் ஆட்சிக்கு வரமுடியாது என்பதால், இருக்கின்ற காலம் வரையிலாவது ஆட்சிக் கதிரையை சூடேற்ற ஆளும் தரப்புச் செயற்படுகின்றது.
ஆனால், நாட்டை நெருக்கடி நிலைமையிலிருந்து மீட்கும் வரையில் அரசியல் அதிகாரப் போட்டிகளை ஒதுக்கிவைக்கவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு. மக்கள் கிளர்ச்சிகள் ஆங்காங்கே வெடிக்கின்றன. அவை ஒழுங்கமைக்கப்பட்ட போராட்டங்களைப் போல இருக்காது. அந்த மக்கள் கிளர்ச்சிகள் ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என்ற பேதம் பார்க்காது. ஒழுங்கமைக்கப்பட்ட போராட்டங்களுக்கு நிகழ்ச்சி நிரல் இருக்கலாம். நிதி உதவிகள் இருக்கலாம். ஆனால், மக்கள் கிளர்ச்சிகளுக்கு அவை எதுவும் இருப்பதில்லை. அந்த கிளர்ச்சிக்கான எழுச்சிக்கு இப்போது தூபமிடப்படுகின்றது. அப்படியொரு மக்கள் கிளர்ச்சிதான் இந்த நாட்டை மீட்டெடுக்கத் தேவையென்றால் அது முகிழ்வதையும் யாராலும் தடுக்கமுடியாது.

### நாளொரு நல்வார்த்தை

எதையும் தொடர்ந்து யோசிக்க மாட்டேன். அந்த நேரத்தில் எது தேவையோ அதை செய்து விடுவேன்.
- *சச்சின் டெண்டுல்கர்*




தமிழர்களின் தொல்பொருள்கள் உள்ள

# ராஜவந்தான் மலையில் அடாவடியில் ஈடுபட்ட பிக்கு!

**திருமலை, ஏப். 25**

**தமிழர்களின் தொல்பொருள் அடையாளங்கள் பல உள்ள திருகோணமலை ராஜவந்தான் மலைக்குச் சென்றவர்களைத் தடுத்து நிறுத்தி பிக்கு ஒருவர் அடாவடியில் ஈடுபட்டுள்ளார்.**



தமிழ் மக்கள் மற்றும் சைவ மதகுருக்கள் வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக நேற்றுக் காலை அங்கு சென்றுள்ளனர்.
இதன்போது பிக்கு ஒருவர் வீதியை மறித்து மக்களைத் தொடர்ந்து செல்லவிடாது தடுத்துள்ளார். அத்துடன் அங்கு சென்றவர்களை இனவாதத்தைத் தூண்டும் விதத்தில் மிகவும் கீழ்த்தரமாகப் பேசியும், அவர்களின் தொலைபேசிகளைப் பறித்தும் அடாவடியில் ஈடுபட்டுள்ளார். அங்கு நின்ற பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்களும் மக்களை அச்சுறுத்தும் விதமாகப் புகைப் படங்களையும் எடுத்துள்ளனர்.
இந்த ராஜவந்தான் மலையின் கீழ் சகாயபுரம் (வெட்டுக்காட்டுச்சேனை) மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது. மூன்று வருடங்களுக்கு முன்னர் மலையின் மேல் இருந்த வழிபாட்டிடம் அழிக்கப்பட்டு, அங்கு பௌத்த சின்னங்களை நிறுவும் வேலைகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-க-இ)

# குறைந்த கட்டண உணவகங்கள் திறக்கும் யோசனை சமர்ப்பிப்பு

கொழும்பு, ஏப். 25
நாடளாவிய ரீதியில் குறைந்த கட்டணங்களைக் கொண்ட உணவகங்களைத் திறப்பதற்கான யோசனை ஒன்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊட்டச்சத்துப் பிரிவின் விசேட நிபுணர் மருத்துவர் ரேணுகா ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
உணவு நெருக்கடிக்கு குறைந்த கட்டணங்களைக் கொண்ட உணவகங்களைத் திறப்பது ஒரு தீர்வாக அமையும். குறைந்த விலையில் மற்றும் இலகுவாக உணவுகளைத் தயாரிக்கும் வகையில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எரிவாயு பற்றாக்குறையால் நாடளாவியரீதியில் சுமார் 30 வீதமான உணவகங்கள் மூடப்பட்டுள்ள நிலையிலேயே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது- என்றார். (எ-இ)

**நாளை** 26.04.2022 செவ்வாய்க்கிழமை சித்திரை 13
சுபநேரம் : 10.29 - 11.59
ராகுகாலம்: 02.59 - 04.29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமிக்கு கிளைகள் இல்லை



கலாநிதி திருமதி சுபாஜினி உதயராசா,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்

பூமிக்கு நாளாந்தம் ஏற்படுத்தப்படும் அழிவுகள் சொல்லிமாளாதவை. ஐக்கிய நாடுகள் சபையும் இதன் தொண்டு நிறுவனங்களும் என்னதான் விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும் பரப்புரைகளை மேற்கொண்டாலும் இயற்கை அழிப்புக்கு திடமான முற்றுப்புள்ளியை வைத்துவிட முடியவில்லை என்பது ஆழ்ந்த கவலை தரும் விடயம்தான்.

பரிமாணம் அடைந்த மனிதனின் நாளாந்த நடவடிக்கைகளால் நிலக்கோளம், நீர்க்கோளம், வளிக்கோளம், உயிர்க்கோளம் என்பன பாதிக்கப்பட்டு வருகின்றன. இதில் உயிர்க்கோளமானது உயிரிணங்களின் தோற்றம், வளர்ச்சி, பரிணாமம், பெருக்கம் என்பவற்றுடன் சூழல் மாற்றங்களின் பிரதிபலிப்பாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. மனிதர்களின் அலட்சியப்போக்குக் காரணமாக புவி தன் சமநிலையை இழந்து செல்கின்றது. பூமி நலமாக இருந்தால் மட்டுமே நாம் சிறப்பாக வாழ முடியும். பூமி வெப்பமாதலுக்கு, காடுகள் அழிவடைவது மிக முக்கியமான காரணமாகும்.

நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்பன மனித வாழ்க்கைக்காக இறைவனால் வழங்கப்பட்ட நன்கொடையாகும். புவியை அலங்கரித்துள்ள கடல், நதி, நீர்வீழ்ச்சிகள், காடுகள், களனிகள், மலைகள், பள்ளத்தாக்குகள் அனைத்தும் மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை.

வானம், பூமி, வளிமண்டலம், சூரியனின் ஒளி (வெப்பம்) சந்திரனின் குளிர்ச்சி, தரைவாழ், கடல்வாழ் உயிரினங்கள், பறவைகள் அனைத்தும் இயற்கையின் அணிகலன்கள். மனிதன் வாழ்க்கையை நடத்துவதற்கு அத்தனையும் தேவையானவை. இந்தச் சுற்றாடல்த் தொகுதி புவியின் சமநிலையைப் பேணி வருகின்றது. இந்தச் சமநிலையில் ஏற்படும் மாற்றங்கள் புவியின் தன்மையை மாற்றி விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தி விடும். ஒவ்வொரு ஆண்டும் சுற்றுச் சூழல் மாசுபாடு, மழையின்மை

**திட்டமிடாத காடழிப்பு, மண்ணகழ்வு, விவசாயத்தில் அளவுக்கதிகமாக நச்சுத்திரவத்தை பயன்படுத்தல், இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்தல், தொழிற்சாலைக் கழிவுகளையும், வீட்டுக்கழிவுகளையும் பாதுகாப்பாக அகற்றாமை ஆகிய செயற்பாடுகளால் சூழல் மாசடைகிறது.**

பூமி வெப்பமடைதல் போன்ற செயற்பாடுகள் அதிகரித்துவருகின்றன. இது மனித வாழ்வாதாரத்துக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. உலகத்துக்கே உணவளித்து, உயிர்காக்கும் ஆதி தொழிலான விவசாயமும், அது சார்ந்த கால்நடை வளர்ப்புத் தொழில்களும் அழிந்து வருகின்றன. அதனைத் தடுக்க உலகம் முழுவதும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நல நிறுவனமான யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கையில் உலகில் ஒவ்வொருநாளும் 700க்கும் மேற்பட்ட சிறார்கள் இறக்கின்றனர். எதிர்வரும் 2040ஆம் ஆண்டுக்குள் ஒரு வயதுக்கு உட்பட்ட ஒரு கோடியே எழுபது இலட்சம் குழந்தைகள் தீவிர மாசுகேடு உள்ள பிரதேசத்தில் வாழ்வார்கள்.



**எதிர்வரும் 2040ஆம் ஆண்டுக்குள் ஒரு வயதுக்கு உட்பட்ட ஒரு கோடியே எழுபது இலட்சம் குழந்தைகள் தீவிர மாசுகேடு உள்ள பிரதேசத்தில் வாழ்வார்கள்.**

தட்பவெப்ப நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் மக்கள் பல்வேறு பாதிப்புகளை சந்தித்து வருகின்றனர். இவ்வாறான பேரிடர்களைத் தவிர்க்க வேண்டுமாயின் பூமியை உரியமுறையில் பேணிப்பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும்.

## இயற்கையைவிட்டு விலகுவதால் பேரழிவில் மனித சமூகம்!

தற்போது மனித சமூகம் இயற்கையை விட்டு நெடுந்தூரம் விலகிவிட்டது. வருங்காலச் சந்ததியினரை கருத்திற்கொண்டு பூமியைக் காப்பாற்ற வேண்டும்.

## இயற்கை அழிப்பென்பது இல்லாதாக்கப்பட வேண்டும்

நாகரிக வளர்ச்சியாலும், பொருளாதார தேவையின் பொருட்டும் மனிதன் கிராமத்தைவிட்டு இடம் பெயர்ந்து நகரப் பகுதிக்கு வந்தான். காலமாற்றத்திலும், குடும்பச் சூழலிலும் இயற்கையுடனான அவனது உறவில் விரிசல் ஏற்பட்டது. ஒரு தனிநபரின் பொருளாதார வளர்ச்சிக்காக இயற்கையைச் சிதைத்தல் தடுக்கப்படவேண்டும். இயந்திரமயமாதலும், புகையும், இரைச்சலும் சிட்டுக்குருவிகள், பூச்சிகளை மட்டுமல்ல நம்மையும் பாதித்து வருகின்றன. உலகம் பூராகவும் உள்ள மழைக்காடுகளில் ஆயிரத்துக்கும் அதிகமான இனக்குழுமங்களாக 140 மில்லியன் பழங்குடியினர் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களின் கலாசாரமும் வாழ்க்கை முறையும் மழைக் காடுகளின் நிலைத்திருத்தலில் வகிக்கும் பங்கு பிரதானமானது. ஏராளமான இரகசியங்களை பொத்தி வைத்திருக்கும் மழைக் காட்டின் 'சாவி' காடுகளின் பாதுகாவலர்களாகிய இந்தப் பழங்குடியினரின் கையிலேயே தான் இருக்கிறது. பல நூற்றாண்டுகாலப் பட்டறிவின் ஊடாக இவர்கள் தேர்வு செய்து பயன்படுத்தும் மழைக் காட்டுத் தாவர, விலங்கினங்களே புதிய ரக இனங்களாக வெளியுலகுக்கு ஆராய்ச்சியாளர்களால் அறிமுகம் செய்யப்படுகின்றன. தாய்லாந்து 'லுஆ' பழங்குடியினர் மாத்திரமே 75 வீதமான உணவுப்பயிர் வகைகளையும் 25 வகையான மூலிகைகளையும் இனங்கண்டு பயிரிடுகிறார்கள் என்றால் உலகம் முழுவதும் உள்ள மழைக்காட்டுப் பழங்குடிகளிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளவேண்டிய மரபணு வளங்களைக் கற்பனை செய்ய இயலாது.

ஆனால், இவ்வளவு இருந்தும் மழைக் காடுகள் படிப்படியாகச் சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனை வேறு வார்த்தையில் கூறுவதாயின் மனிதன் படிப்படியாக இயற்கையை அழித்துக் கொண்டிருக்கிறான். நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பூமியின் நிலப்பரப்பில் 12 சதவீதத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த அயன மண்டல மழைக்காடுகள் இன்று வெறும் 5 சதவீதம் எனக் கூறும் அளவுக்குக் குறுகிப் போயிருக்கிறது. இயற்கையை அழிப்பதனால் அழிக்கப்படுவது ஆயிரக்கணக்கான தாவர, விலங்கின வகைகளும் ஈடுசெய்யப்பட முடியாத பாரம்பரியப் பொருளுமே தவிர வறுமை ஒழிப்பல்ல. மாறாகப் பூமி சந்தித்த கோரப் புயல்களும் இயற்கையோடு ஒட்டிய வகையில் பஞ்சம், பட்டினி என்று பொசுக்கிக் கொண்டிருக்கும் கடும் வறட்சி போன்றவையுமே. அதாவது இயற்கையை அழிப்பதனால் புவிச் சமநிலை குலைவுகள்தான் ஏற்படுகின்றன. திட்டமிடாத காடழிப்பு, மண்ணகழ்வு, விவசாயத்தில் அளவுக்கதிகமாக நச்சுத்திரவத்தைப் பயன்படுத்தல், இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்தல், தொழிற்சாலைக் கழிவுகளையும், வீட்டுக் கழிவுகளையும் பாதுகாப்பாக அகற்றாமை ஆகிய செயற்பாடுகளால் சூழல் மாசடைகிறது.

மனிதன் சூழலைப் பாதுகாப்பதில் அக்கறையுடன் இருந்தால் மட்டுமே இத்தகைய ஆபத்துக்களில் இருந்து புவியைப் பாதுகாக்கலாம். இது தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் ஆழமாகப் பதியவேண்டும். சுருங்கச் சொல்வதாயின் இயற்கையின் இருப்புத்தான் எமது இருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்விகற்கும் மாணவி ஒருவருக்கு நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் தெய்வேந்திரம் கிரிதரனின் ஏற்பாட்டில் மகேஸ்வரன் தனேசனின் நிதிப்பங்களிப்பில் துவிச்சக்கரவண்டி ஒன்று வழங்கப்பட்டது. (ய-159)



வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாசாலையின் கால்கோள் விழா அண்மையில் பாடசாலை அதிபர் எஸ்.சசிதரன் தலைமையில் இடம் பெற்றது. (ய)



'பூமி மணித்தியாலம்' எனும் தொனிப்பொருளில் விடியல் ஆடைத்தொழிற்சாலை நிறுவனத்தினர் கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுமைக் குடிலை அமைத்துக் கொடுத்துள்ளனர். விடியல் நிறுவனத்தின் மனிதவள முகாமையாளர் றொஹான் டாபரேவால் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டுக்காக இந்த பசுமைக்குடில் ஒப்படைக்கப்பட்டது. பயன்தரு மரக்கன்றுகளும் பாடசாலையில் நடப்பட்டன. (ம-ய-159)



இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட மேற்பிரிவுக்கான பேச்சுப் போட்டியில் நிகழ் நிலையூடாகப் பங்குபற்றி தேசியத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவன் முருகதாஸ் யதுர்சன் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் வைத்துக் கௌரவிக்கப்பட்டார். (ய-159)





மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்தின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌர விக்கும் நிகழ்வு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் ஆ.இராசரத்தினம் தலைமையில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. (ய-159)



மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையின் கால்கோள் விழா கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் க.சத்தியானந்தன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. (ய-159)



கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் தரம் 6 இல் கல்வி கற்க புதிதாக வருகை தந்த மாண வர்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ் தலைமையில் பொன்சபாபதி மண்டபத்தில் இடம்பெற்றது. (ய-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** சுபச்செலவுகள் அதிகமானாலும் குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். உங்களது திறமைகளை வெளிப்படுத்த புதிய வாய்ப்பு கிடைக்கும். பிறர் மனம் வருந்தும்படியாக நடக்காதீர்கள்.

**இடபம்:** எதிர்பார்த்த நல்ல செய்தி உங்களைத் தேடி வரும். உடல்நலனில் கவனம் செலுத்த வேண்டியநாள். அக்கம்பக்கத்தினரிடம் கடுமை காட்ட வேண்டாம்.

**மிதுனம்** : எதிர்பாலினத்தினரின் விஷயத்தில் தலையிடவேண்டாம். இன்று மிகவும் கவனமாகச் செயற்படுவதும் பேசுவதும் முக்கியம். குடும்பத்தில் திருமணப் பேச்சு சாதகமாகும்.

**கடகம்:** புதிய வாய்ப்புகள் வரும். போது நன்கு பயன்படுத்துவீர்கள். பணிச்சுமையால் சோர்வு ஏற்பட்டாலும் உற்சாகமாக இருப்பீர்கள். நற்பலன் கிடைக்கும்.

**சிம்மம்:** பணியில் பொறுப்புடன் செயற்பட்டு நற்பெயர் எடுப்பீர்கள். உங்களுக்குத் தேவையான பணம் உடனே கிடைக்கும். உடல் நலத்தில் கவனம் செலுத்தி நன்மை காண்பீர்கள்.

**கன்னி:** பிறருக்கு நன்மை செய்வதால் நற்பலனும் ஆசியும் கிடைக்கும். எதிலும் அலட்சியம் வேண்டாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணியில் மாற்றம் செய்து பயனடைவீர்.

**துலாம்:** பழைய பிரச்சினைகளைக் களைவதில் மும்முரம் காட்டுவீர்கள். எதிர்கால நன்மை கருதி தீட்டிய திட்டம் இன்று நிறைவேறும். சேமிப்பு உயரும். மேலதிகாரியின் தொல்லை நீங்கும்.

**விருச்சிகம்:** கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். செலவுகள் கட்டுப்படும். அரசியலில் முக்கியமான பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பிள்ளைகளால் பெருமிதம் அடையும்நாள். மகிழ்ச்சி கூடும்.

**தனுசு:** உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். தாயாருக்கு நன்மை வரும். பணியிடத்தில் தேவையற்ற பிரச்சினைகளை சமாளிக்க வேண்டிவரும். எதிரிகளின் பலம் குறையும்.

**மகரம்:** பரபரப்பாக செயற்படுவீர்கள். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. அலுவலகத்தில் எந்தவொரு திட்டத்தையும் யோசித்து செயற்படுத்துவீர்கள். பணிகள் தாமதத்துக்குப் பின் நிறைவேறும்.

**கும்பம்:** உங்களுக்கு வாக்குப்பலிதம் கூடும். செல்வாக்கு உயரும். குடும்பத்தில் நீண்டகாலமாக காத்திருந்த சுப நிகழ்வு உறுதியாகும். பணியாளர்களுக்கு பல நன்மை வந்து சேரும் நாள்.

**மீனம்:** பணியிடத்தில் எந்தவொரு அவசர முடிவையும் எடுக்க வேண்டாம். பிறருடைய குடும்ப விஷயங்களில் தலையிட வேண்டாம். தெய்வவழிபாடு நன்மை தரும்.

## எரிபொருள்...

னத்திடமிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்க்கான கொடுப்பனவுக்கே இந்த அழுத்தம் மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் என்பவற்றுக்கான கடன் வழங்கலை இலங்கை அரசாங்கம் பிற்போட்ட நிலையில், இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

மேற்படி நிறுவனம் 95 ஆயிரம் மெற்றிக் தொன் எண்ணெய்யை இலங்கைக்கு விநியோகித்து, அதற்கான கொடுப்பனவை வழங்குவதற்கு 200 நாள்கள் கால அவகாசம் வழங்கியிருந்தது. எனினும், தற்போது 80 நாள்களுக்குள் தமக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என இலங்கையை அந்த நிறுவனம் நிர்ப்பந்திப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஏனைய எண்ணெய் நிறுவனங்களும் இதே நிலையைப் பின்பற்றலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சவுதி அரேபியா, குவைத் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளில் உள்ள எண்ணெய் விநியோக நிறுவனங்களுக்கு வழங்க வேண்டிய கொடுப்பனவுகளும் பிற்போடப்பட்டுள்ளதாக திறைசேரித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(அ-ஒ-இ)

## கொழும்பு...

போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள இதனைத் தெரிவித்தார். தற்போது சேவையில் ஈடுபடும் பாரவூர்திகளின் எண்ணிக்கையும் 60 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதன்காரணமாக இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் பகிர்ந்தளிக்க முடியாத நிலையில் துறைமுகத்தில் தேங்கியுள்ளன என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

(அ-ஒ-இ)

## எரிவாயு...

படும் என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. எனினும் ஆறு நாள்களுக்கு மட்டுமே வழங்க முடியும் என்று அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிவாயு இன்று நாட்டுக்கு கொண்டு வரப்படும். எனினும் விநியோகம் இரண்டு நாள்களுக்குப் பின்னர்தான் ஆரம்பிக்கப்படும் என்று லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

'நாளை (இன்று) திங்கட்கிழமை எரிவாயு நாட்டுக்கு வரும். ஆனால் இறக்கும் பணி மற்றும் சிலிண்டர்களை நிரப்ப ஒரு நாள் அல்லது இரண்டு நாள்கள் ஆகும். எனவே நாங்கள் அதை ஏப்ரல் 27 அன்றுதான் சந்தைக்கு விநியோகிக்க முடியும்' என்று அவர் கூறினார்.

3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் சமையல் எரிவாயு மூன்று நாள்களுக்கு மட்டுமே விநியோகிக்க முடியும். நாளைமறுதினம் மற்றொரு 3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

(அ-ஒ-இ)

## மின்வெட்டு....

27ஆம் திகதி வரையான மூன்று நாள்களுக்கு அனைத்துப் பிரதேசங்களிலும் 4 மணி நேரம் 30 நிமிட மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை அறிவித்திருந்த நிலையில் மின்வெட்டு நேரம் 1 மணித்தியாலத்தால் குறைக்கப்பட்டுள்ளது. களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்துக்கு எரிபொருள் தொகை வழங்கப்பட்ட காரணத்தாலேயே 3 மணித்தியாலம் 30 நிமிடங்களுக்கு மின்வெட்டு நேரம் குறைக்கப்பட்டுள்ளது.

(அ-ஒ-இ)

## பணவருகை...

ராக இருந்த இலங்கை தொழிலாளர்களின் பணம், மார்ச் மாதத்தில் 318 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

இதேவேளை கடந்த ஆண்டு மார்ச் மாதம் 612 மில்லியன் அமெரிக்க- டொலர் கிடைக்கப்பெற்றிருந்தது.

இதேவேளை- மார்ச் மாத தொடக்கத்திலிருந்து இலங்கை நாணயத்தை மிதக்கவிட, மத்திய வங்கி முடிவு செய்ததை அடுத்து இந்தச் சிறிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

(ஒ-இ)

# ஷாங்காய் மாநகரில் முழு ஊரடங்கு நீடிப்பு

## சீன அரசு உத்தரவு

பீஜிங், ஏப்.25

சீனாவின் ஷாங்காய் மாநகரில் கொரோனாப் பரவல் அதி கரித்து வருவதால் அங்கு நாளை வரை முழு ஊரடங்கு நீடிக்கப்படுகிறது என சீன அரசு தெரிவித்துள்ளது.

சீனாவின் வணிக மற்றும் நிதி தலைநகராக விளங்கும் ஷாங் காய் மாநகரில், கடந்த 3 வாரங் களுக்கும் மேலாக பொது முடக்கம் நடைமுறையில் உள்ளது.

அங்கு கொரோனாப் பரவல் அதிகரித்து வருவதோடு ஒரே நாளில் 12 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். இதனால் ஷாங்காய் நகரில் ஊரங்கு நீடிக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ச-இ)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 . 10 . 1932 | 22 . 04 . 2022 |

## திருமதி நடராஜா தங்கரத்தினம்

யாழ்ப்பாணம் பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா தங்கரத்தினம் அவர்கள் கடந்த (22.04.2022) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை- இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னையா-பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், நடராசாவின் பாசமிகு மனைவியும், செல்வநாயகம் (கனடா), செந்தில்குமார் (கனடா), பாலச்சந்திரன் (கனடா), கதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவமலர், விமலாதேவி, கோமதி, மதிவதனி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, நல்லம்மா, அன்னலிங்கம், சுந்தரலிங்கம், பாலசிங்கம், துரைவீரசிங்கம் மற்றும் கனகபூசணி அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், றமேஸ்கரன், றஞ்சித்குமார், பிரசாத், பிரவீனா, பிருந்தா, றுசாந்தி, நிரோஜ், கஜன், கபில், திபிசன், கார்த்திகன், அனுஷன், பானுஜன், யானுஜன், சிவனுஜா ஆகியோரின் பேர்த்தியும், றாஜ்வின், றாகின், றிகானா, அக்ஷயா, சஸ்மிகன், சிரேஜா, ப்ரித்வின், விகாஸ், கனிஸ்கா, ரெசன், நிக்கிதா, சோபிகா, அஸ்வின் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா நேரப்படி இன்று (25.04.2022) திங்கட்கிழமை பிற்பகல் 6.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கனடாவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

[illegible] பாடசாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
செ.ரஞ்சித்குமார்:- 077 911 6045

தொடர்புகளுக்கு:-
செல்வநாயகம்:- (416) 276-6841
செந்தில்குமார்:- (647) 854-9312
பாலச்சந்திரன்:- (416) 858-4095
கதீஸ்வரன்:- (647) 708-4287

(CS 19491) (4/6)

# ஆப்கானில் ரிக் -டாக், பப்ஜி செயலிகளுக்குத் தடை

காபூல், ஏப்.25

ஆப்கானிஸ்தானில் ரிக்-டாக் மற்றும் பப்ஜி ஆகிய செயலிகளுக்குத் தலிபான்கள் தடைவிதித்துள்ளனர். இளைஞர்கள் வழிதவறிச் செல்லும் வகையில் இந்த செயலிகளின் பயன்பாடு காணப்படுகிறது எனக் கூறி தலி பான்கள் இந்த தடையை விதித்துள்ளனர். ஆப்கானிஸ்தானில் பொழுதுபோக்கு அம்சங்கள் பலவற்றுக்குத் தலி பான்கள் தடைவிதித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

(ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பரசருடன் இணைந்து கூட்டுப் பிரார்த்தனை

கொழும்பு, ஏப். 25
இலங்கையில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுடன் இணைந்து பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ் இன்று விசேட பிரார்த்தனையில் ஈடுபடவுள்ளார். வத்திக்கானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கையின் ஆயர்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களில் சிக்கிப் பாதிக்கப்பட்டவர்கள் இணைந்து இந்தப் பிரார்த்தனையில் பங்கேற்கவுள்ளனர்.
விசேட ஆராதனையின் பின்னர் இலங்கையில் இருந்து சென்றவர்கள் புனித பாப்பரசருடன் சந்திப்பையும் மேற்கொள்ளவுள்ளனர். (எ-இ)

# பாரம்பரிய முத்திரையை எங்களுக்கு குத்தாதீர்கள்

## சஜித் எடுத்துரைப்பு



**கொழும்பு, ஏப். 25**
**'அவர்களும் ஒன்றே, இவர்களும் ஒன்றே' என்ற கருத்து ஐக்கிய மக்கள் சக்திக்கு பொருந்தாது. பாரம்பரிய எதிர்க்கட்சியின் வகிபாகத்துக்குப் பதிலாக ஒரு நவீன அரசியல் செயற்பாட்டின் வகிபங்கு ஐக்கிய மக்கள் சக்தியால் மேற்கொள்ளப்படுகின்றது என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவின் பிரகாரம் செயற்படுத்தப்படும் 'ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஒரு மூச்சு' திட்டத்தின்கீழ் சுமார் 70 லட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் இரத்தினபுரி போதனா மருத்துவமனைக்கு நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. அதில் கருத்துத் தெரிவிக்கையிலேயே சஜித் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாடு கட்டியெழுப்பப்பட வேண்டிய தரவு மற்றும் அறிவியல் காரணங்களின் அடிப்படையில் அமைந்த தெளிவான திட்டத்துடனயே ஐக்கிய மக்கள் சக்தி இருக்கின்றது.
கொரோனா பெருந்தொற்று காரணத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்கு சுகாதார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் பொருட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் குழு, அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் வெளிநாட்டுக் கிளைகள், உள்நாட்டு வெளிநாட்டு ஆதரவாளர்கள் தமது அர்ப்பணிப்பால் இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றனர் என்றும் சஜித் மேலும் தெரிவித்தார். (ம)

# வீட்டில் துப்பாக்கிச்சூடு: நபரொருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப்.25
வீடொன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், நபரொருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் பெலியத்த, தாரபெரிய, நிஹிலுவப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஒருவரால் இந்த துப்பாக்கிப்பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் நிஹிலுவப் பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதானவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். (க-இ)

# பொருள்களின் விலை அதிகரிப்பால் 75 வீதமான கட்டுமானம் முடக்கம்!

கொழும்பு, ஏப். 25
எரிபொருள் விலையுடன் தொடர்புபட்ட கட்டுமானப் பொருள்களின் விலை அதிகரிப்பால் சுமார் 75 வீதக் கட்டுமானப் பணிகள் முடக்கமடைந்துள்ளன என்று இலங்கைத் தேசிய கட்டுமான சங்கம் தெரிவித்துள்ளது.
இதற்கமைய மணல் கியூப் ஒன்றின் விலை மட்டும் 8 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளதாக சங்கத்தின் துணைத் தலைவர் எம். டி.போல் தெரிவித்தார். இதனால் சுமார் 1.2 மில்லியன் கட்டுமானத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-14)

# வாய்த்தர்க்கம் முற்றியதால் ஒருவர் கொலை

கொழும்பு, ஏப். 25
ஹெம்மாதகம பிரதேசத்தில் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ள நிலையில், அந்தச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபருடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக இந்தக் கொலை நடந்துள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
ஹெம்மாதகம, தும்புலுவாவ பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில், அதே பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# நீர் வீழ்ச்சியில் தவறி வீழ்ந்த மாணவன் சாவு!

கொழும்பு, ஏப்.25
நீர் வீழ்ச்சியில் தவறி வீழ்ந்த, பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். மாவனெல்லை ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள மியான் நீர் வீழ்ச்சியைப் பார்வையிட சென்றவேளையில் குறித்த மாணவன் நீர்வீழ்ச்சியின் கரையில் இருந்து தவறி வீழ்ந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
விபத்தில் படுகாயமடைந்த மாணவன் மாவனல்லை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். (க-இ)

# மழை தொடர்ந்தாலும் மின் துண்டிக்கப்படும்!

## மின்சாரசபை தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25
தற்போது பெய்து வரும் தொடர் மழையால் நீர்த்தேக்கங்கள் அதிகபட்ச கொள்ளளவை எட்டும் வரை மின்சார விநியோகத்தை அவ்வப்போது நிறுத்த வேண்டியிருக்கும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.
தற்போது நீர்மின் நிலையங்களில் இருந்து 25 வீத மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதாக இலங்கை மின்சாரசபையின் பொதுமுகாமையாளர் டி.சி.ஆர். அபேசேகர தெரிவித்துள்ளார்.
மேலும் மின்சார உற்பத்திக்குத் தேவையான உலை எண்ணெய் இருப்புக்களை ஏனைய மின் உற்பத்தி நிலையங்கள் தற்போது பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ம-14)

# சுற்றுலா வர்த்தகங்களுக்கு ரூ.60 மில்லியன் நிதியுதவி

சிறு சுற்றுலா வர்த்தகங்களுக்கு 60 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளது.
இலங்கையிலுள்ள ஐரோப்பிய ஒன்றியமும், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து இந்த நிதியுதவியை வழங்க முன்வந்துள்ளன. (ம-14)

# நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 72 வீதமாக உயர்ந்தது

கொழும்பு, ஏப். 25
நாடளாவிய ரீதியில் உள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அண்மைக்காலமாக கொள்ளளவில் 72 வீதமாக அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
நாடு முழுவதிலும் மழை புதிவாகியுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பணிப்பாளரான பொறியியலாளர் டி அபேசிறிவர்தன தெரிவித்தார்.
ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அநுராதபுரம் மாவட்டத்தில் பதிவாகியுள்ள 100 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி காரணமாக ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டு விநாடிக்கு 3 ஆயிரம் கன அடி வீதம் கலா ஓயாவுக்கு நீர் விடப்பட்டுள்ளது.
அநுராதபுரத்தில் உள்ள கண்டி ஏரி, நச்சதுவ மற்றும் மஹவிலச்சிய குளங்கள் கொள்ளளவை எட்டியுள்ளன. அனைத்துப் பிரதான நீர்ப்பாசன வலயங்களிலும் சிறுபோகம் ஆரம்பிக்கும் வகையில் நீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Audit Tranee/Supervisor என்.எஸ்.கே.அசோசியேற்ஸ்**

யாழ்ப்பாணத்தில் உள்ள கணக்காய்வு நிறுவனத்திற்கு Audit Tranee/Supervisor தேவை.

(பகுதி நேர வேலை தேடுவோர் விண்ணப்பிக்கலாம்)

077 036 0555

(CS 19486) (4/6)

**பிரத்தியேக வகுப்புக்கள்**

தரம் 6 முதல் O/L வரையான மாணவர்களுக்கு அனைத்து பாடங்களும் A/L மாணவர்களுக்கு பௌதீகவியல், இரசாயனவியல், பொருளியல், வணிகக்கல்வி உட்பட அனைத்து பாடங்களும் கற்பிக்கப்படும்.

077 272 6691

(CS 19487) (4/6)



சிவமயம்

ஸ்தாபிதம் 1945.05.31 பதிவு இல. HA/S/JA/419

## அருள்மிகு தும்பளை நெல்லண்டை பத்திரகாளி -அம்மன் கோவில் வருடாந்த வெளிமடை உற்சவம் - 2022

அம்பாள் அடியார்களே!

நிகழும் சுபகிருது வருடம் சித்திரைத்திங்கள் 23ஆம் நாள் (06.05.2022) வெள்ளிக்கிழமை மேற்படி உற்சவம் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளது.

| | |
|---|---|
| **விளக்கு வைப்பு** | **: 29.04.2022 வெள்ளிக்கிழமை காலை பூசையுடன் நடைபெறும்.** |
| **மடைப்பண்டம் எடுத்தல்** | **: 06.05.2022 வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணி பூசையினைத் தொடர்ந்து இடம்பெறும்.** |
| **வெளிமடைப்பூசை** | **: 07.05.2022 சனிக்கிழமை காலைப்பூசையுடன் நடைபெறும்.** |
| **8ம் மடை** | **: 13.05.2022 வெள்ளிக்கிழமை மாலைப்பூசையுடன் நடைபெறும்.** |

**காவடி, கரகம், பாற்செம்பு, கற்பூரச்சட்டி போன்ற நேர்த்திக்கடன்களை மேற்கொள்ளும் அடியார்கள் 06.05.2022 வெள்ளிக்கிழமை காலை 07.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை மேற்கொள்ளலாம்.**


**மு.குறிப்பு : கோயில் வளாகத்தினுள் கடைகள் வைப்பதற்கு இம்முறை அனுமதி இல்லை.**

**தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்**
**தரும பரிபாலனசபை**

(in.17238) (2.6)

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 13 . 04 . 1945



**மறைவு** 24 . 04 . 2022

# E.S. பெனடிக்ற் (சந்திரன்)

கச்சேரி நல்லூரினைப் பிறப்பிடமாகவும் சுவாமியார் வீதி கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட E.S.பெனடிக்ற் (சந்திரன்) நேற்று (24.04.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவி - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான யோசேப்பு - அன்னம்மா தம்பதியரின் மருமகனும், செபஸ்டியம்மா (பூவா) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வணிகக் கல்வி ஆசான் பசில் ஜெனதாஸ் ஞானதாஸ் (ரமேஸ்) மற்றும் சுமதி, அன்ரனிதாஸ் (ரஞ்சித்), அனுஷா, றெமிங்ரன், சசி, குயினா ஆகியோரின் அன்புத் தந்தையும், லதா, காலஞ்சென்ற கோமதி, தனலிங்கம், சூரியா, தர்சினி, செல்வி, சதீஸ், ஸ்றெலன் ஆகியோரின் மாமனாரும், நெல்சன், ராகேல் ஆகியோரின் சித்தப்பாவும், காலஞ்சென்றவர்களான பெரியமணியம், மணியம் மற்றும் ராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தங்கேஸ்வரி, அருளம்மா மற்றும் கிருஸ்ஷணன், காலஞ்சென்ற மலர் மற்றும் அந்தோனிப்பிள்ளை (ராசன்) ஆகியோரின் மைத்துனரும், ஜெசிந்தன், டிலக்ஷனா, கெஷோன், ஜேம்ஸன், சொப்னா, ஜெப்ரஸன், தஸ்மிகா, ஜேவிட்சன், ரூட்சிகா, ஜெபோல்சன், அபிஷேக், அனஸ்கா, அருஷாந், ரக்ஷாந் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவாரர்.

அன்னாரின் இறுதி நல்லடக்க நிகழ்வுகள் இன்று (25.04.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 472 6735

(cs.44296) (2.6)

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 14 பருத்தித்துறை வீதி 3ம் ஒழுங்கை 33ம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதனவரிப்பதிவேட்டில் M.சுப்பு என்ற பெயரில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் 22.10.1998ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு S.பரமராஜா முகதாவில் 2144ம் இலக்கத்தில் நிறைவேற்றிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் விநாசி திரவியம் பெண் அன்னபூரணம் குறித்த ஆதனம் தங்களின் திருமணத்தின் போது குறித்த ஆதனத்தை எமக்கு சீதனமாக கையளித்த வேளையில் எழுதப்பட்ட சீதன உறுதி 1995 ம் ஆண்டு ஐப்பசி மாதம் இரவிரச இராணுவ நடவடிக்கையின் போது ஏற்பட்ட இடப்பெயர்ச்சியின் போது தொலைத்து விட்டமையை உறுதிப்படுத்தி வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை 26.03.2009 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா சிறிதரன் முகதாவில் 443ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் விநாசி திரவியம் பெண் அன்னபூரணம் கந்தையா தர்மராஜா பெண் மீனாவுக்கு சீதனமாக வழங்கியுள்ளார்கள்.

பின்னர் குறித்த ஆதனத்தை 03.11.2017ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு J.S.A.மதுரநாயகம் முகதாவில் 3779ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதிப்படுத்தல் உறுதி மூலம் கந்தையா தர்மராஜா பெண் மீனாவுக்கு நிறைவேற்றியுள்ளார்கள். பின்னர் குறித்த ஆதனத்தை 04.02.2022ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா சிறிதரன் முகதாவில் 4620ம் இலக்கத்தில் உறுதிப்படுத்தல் உறுதி மூலம் கந்தையா தர்மராஜா பெண்மீனாவுக்கு உறுதிப்படுத்தி உள்ளார்கள்.

பின்னர் குறித்த ஆதனத்தை பெயர் மாற்றம் செய்வதற்கு 18.02.2022 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா சிறிதரன் முகதாவில் 7212 இலக்கத்தில் கந்தையா தர்மராஜா பெண் மீனா விசேட அற்றோனித்தத்துவம் மூலம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி இலக்கம் 83/8 ம் இலக்கத்தில் வசிக்கும் ஜெயரட்ணம் பெண் வாசுகிக்கு வழங்கியுள்ளார்.

ஆதன அட்டவணை:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென் கிழக்கு இறை, பிரதேசசெயலாளர் பிரிவு - யாழ்ப்பாணம், யாழ் மாநகரசபை கிராமசேவையாளர் பிரிவு J/78

"பீக்குளம் கரையும் பீக்குளம் தலைமடையும்" நிலப்பரப்பு 1.1/2 இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் அவர்களால் 23.07.2017இல் 2925ம் இலக்கத்தில் அளந்து தயாரித்த நில அளவைப்படத்தில் Lat 01 குறிப்பிடப்பட்ட துண்டாகிய நிலப்பரப்பில் 00 (சைபர்) குளி 15.70 (பதினைந்து தசம் ஏழு சைபர்) ம் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும். இந்த நிலப்பரப்பு 00 குளி 15.70 க்கும் எல்லை.

கிழக்கு - ஒழுங்கை
வடக்கு - வாய்க்கால்.
மேற்கு - ஒழுங்கை
தெற்கு - மாணிக்கம் சுப்பிரமணியத்தின் ஆதனம் இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்

தற்போது கந்தையா தர்மராஜாவும் பெண் மீனாவும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோறாதவிடத்து குறித்த ஆதனமானது. கந்தையா தர்மராஜாவும் பெண் மீனாவும் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(cr.37883) (2.6)

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 26 . 11 . 1966



**மறைவு** 23 . 04 . 2022

# பாஸ்கரன் பிறேமலதா

(ஆசிரியர் - யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் - வலி வடக்கு பிரதேச சபை உறுப்பினர், சமாதானநீதவான் )

காங்கேசன்துறையினை பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயினை வசிப்பிடமாகவும் கொண்ட பாஸ்கரன் பிறேமலதா நேற்றுமுன்தினம் (23.04.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதன் - கமலாதேவி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் மருமகளும், கந்தையா பாஸ்கரனின் அன்பு மனைவியும், சக்திவர்மன், இலக்கியா, கருணிகா ஆகியோரின் அன்புத் தாயும், சுதாகர், பிரபாகர், கமலதீபன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் சங்கானை கராச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
077 625 9241
076 659 0254
077 440 9601

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs44298)(2.6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*அம்புலன்ஸுக்கும்...*

மற்றும் 'கோத்தாகோகம' ஆகிய பிரதேசங்களுக்குள் நுழைந்து விடாத வகையில், பிரதான வீதிகளில் நிரந்தர இரும்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் வெளித்தெரியாதவாறு கூர் ஆணிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த வீதித் தடைகள் காரணமாக பொதுமக்கள் நேற்றுப் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர். அத்துடன் அம்புலன்ஸுகளும் செல்ல முடியாத நிலைமை காணப்பட்டது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் சார்பில் கொழும்பு கோட்டையிலிருந்து காலிமுகத்திடலிலுள்ள 'கோத்தாகோகம' வரையில் பேரணி முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. நீதிமன்றத்தை அணுகிய பொலிஸார், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய உறுப்பினர்கள் 16பேருக்கு தடை உத்தரவு பெற்றிருந்தனர்.

நேற்றுமுதல் இன்று காலை 9 மணி வரை கோட்டை ஜனாதிபதி மாவத்தை, யோர்க் வீதி, லோட்டஸ் வீதி மற்றும் வங்கி மாவத்தை உள்ளிட்ட இடங்களுக்கு அவர்களுக்கு நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மேற்படி வீதிகளையும் அதனைச் சூழவுள்ள வீதிகளையும் பொலிஸார் நிரந்தர இரும்பு வேலிகளை அமைத்து மூடினர். இரும்பு வேலிகளைத் தாண்டி முன்னோக்கிச் செல்ல முயன்றால் இரும்பிலான கூர் முற்கள் குத்தும் வகையில் அமைத்திருந்தனர். அதனை மூடி மறைத்து கறுப்பு பொலித்தீன் சுற்றப்பட்டிருந்தது.

சில இடங்களில் பொதுமக்கள் பொலிஸாருடன் முரண்பட்டனர். வேறு சில இடங்களில், அமைக்கப்பட்ட கம்பி வேலிகளுக்குள்ளால் பெரும் சிரமத்துக்கும் மத்தியில் நுழைந்து பொதுமக்கள் சென்றனர். சுற்றுலாவிகளுக்கும் இதே நிலைமையே ஏற்பட்டது.

கொழும்பு - லோட்டஸ் வீதியில் ஏற்படுத்தப்பட்ட தடை காரணமாக நோயாளிகளை ஏற்றி வந்த அம்புலன்ஸ் திரும்பிச் செல்ல வேண்டி ஏற்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு பாதுகாப்புக்கடமையிலிருந்த பொலிஸாருடன் மக்கள் கடும் வாக்குவாதப்பட்டனர்.

இந்நிலையில், அம்புலன்ஸ், சுற்றுலாத்துறையினரை ஏற்றிவரும் வாகனங்கள் மற்றும் பொதுச் சேவைகளுக்கு இடமளிக்கும் வகையில், தடுப்பு வேலிகளை அகற்றுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவுறுத்தினார்.

இதேவேளை- பொலிஸார் கொழும்பில் ஏற்படுத்திய வீதித் தடைகளுக்கு எதிராக கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஊடகவியலாளர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். (அ-ஒ-5)

(தொடர்புடைய செய்தி - பக்:2)


## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
### பழைய மாணவர் சங்கம்

**விசேட பொதுக் கூட்டம்**

எமது சங்கத்தின் 30 அங்கத்தவர்களின் கையொப்பத்துடன் 21.04.2022 அன்று கிடைக்கப்பெற்ற கோரிக்கைக்கு அமைவாக தற்போதைய செயற்குழுவானது 08.05.2022 காலை 9.00 மணிக்கு சபாலிங்கம் கேட்போர் கூடத்தில் விசேட பொதுக்கூட்டத்தை நடாத்தத் தீர்மானித்துள்ளது. சகல அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**குறிப்பு:- திட்டமிட்டபடி வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும் 15.05.2022 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறும்.**

(CR 37888) (4/6)

செயலாளர்
பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி





சக்தி துணை

## நாரந்தனை சைவ மகாசபையின் விசேட பொதுக் கூட்டம் (தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்) 30.04.2022

அம்பிகை அடியார்களே!

நிகழும் சுபகிருது வருடம் சித்திரை மாதம் 17ஆம் நாள் (30.04.2022) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மண்டபத்தில் சபைத் தலைவர் திரு.வே.துரைராசா தலைமையின் கீழ் மேற்படி விசேட பொதுக்கூட்டம் நடைபெற அம்பிகையின் அருள் கூடியுள்ளது. அத்தருணம் சபை அங்கத்தவர்கள், அம்பிகை அடியார்கள் யாவரும் வருகை தந்து ஆலய வளர்ச்சியில் பங்குபற்றுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**நிகழ்ச்சி நிரல்**

01. தேவாரம்
02. தலைமையுரை
03. இராஜகோபுர கும்பாபிஷேகம், மகோற்சவம் மற்றும் நித்திய பூசைக்குரிய குருமார்கள் தொடர்பாக கலந்துரையாடல்
04. இராஜகோபுர கும்பாபிஷேக மலர்க்குழுவினைத் தெரிவு செய்தல்
05. CCTV Camera தொடர்பாக ஆராய்தல்
06. நன்றியுரை
07. தேவாரம்

**குறிப்பு:- பிரேரணைகள் இருப்பின் எழுத்து மூலம் செயலாளர் அவர்களுக்கு 29.04.2022ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.**

சைவமகாசபை, நாரந்தனை.
23.04.2022
(CS 19488) (4/6)
திரு.சி.தனபாலன் (செயலாளர்)
077 471 1466



# தந்தை செல்வா

அவர்களின்

## 45ஆவது நினைவு நாள் அஞ்சலியும் நினைவுப் பேருரையும்

## 26.04.2022

தலைமை
ஓய்வுநிலை ஆயர் கலாநிதி சு.ஜெபநேசன் அவர்கள்
(தலைவர். தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு )

**மாலை அணிவித்தலும் மலர் அஞ்சலியும்**

நேரம் :- முற்பகல் 09.30 மணி
இடம் :- தந்தை செல்வா நினைவிடம், யாழ்ப்பாணம்

**நினைவுப் பேருரையும் புத்தக வெளியீடும்**

நேரம் :- முற்பகல் 10.00 மணி
இடம் :- தந்தை செல்வா கலையரங்கம், யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்

**நினைவுப் பேருரையாளர்**

பேராசிரியர் **சங்கரன் விஜேசந்திரன்** பொருளியல் துறை. பேராதனைப் பல்கலைக்கழகம். **"தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளும் அரசியல் தீர்வை நோக்கிய முன்னெடுப்புக்களும்"**

**புத்தக வெளியீடு**

**அமரர் ச.சகாயசீலன்** (சிரேஷ்ட விரிவுரையாளர். யாழ் பல்கலைக்கழகம்) அவர்கள் எழுதிய **"இலங்கையின் தமிழ் அரசியல் இயக்கங்களும் தமிழ்த் தேசியவாதமும்"**

முதற்பிரதி பெறுபவர் **திரு.ஈ.சரவணபவன்**
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

(cs.44297) (2.6)

மேற்படி நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு



# 24ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 08 . 07 . 1947
உதிர்வு 21 . 04 . 1998

அமரர்
## கதிரவேலு கந்தையா
(இரத்தினம் மெக்கானிக்)

திதி: 25.04.2022

அப்பா பிள்ளைகளை வளர்ப்பது பெற்றோரின்
கடமை என்பதையும் மீறி உங்கள் எல்லையற்ற
அன்பால் அரவணைப்பால் எங்களைச் சிறப்புற
வாழவைத்து அதைப் பார்த்து மகிழாமல்
பாதியில் சென்று விட்டீர்கள் அப்பா!

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs 19467) (2.6)



## வேலையாள் தேவை

யாழ். நகரில் உள்ள கடை ஒன்றுக்கு ஆண்,பெண் இருபாலாரும் தேவை.

(CS 19492) (4/6)

077 937 0000, 075 988 1000



## பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றில் இரு பிள்ளைகளை மட்டும் பராமரிப்பதற்கு 35 வயதிற்கு மேற்பட்ட வேலையாள் தேவை.

(CS 19493) (4/6)

077 937 0000, 075 498 5400



# நினைவஞ்சலிகள்

5ஆம் ஆண்டு | 6ஆம் ஆண்டு | 11ஆம் ஆண்டு



அமரர்
**நா.நல்லதம்பி**
பிறப்பு 26.05.1928 இறப்பு 05.11.2017



அமரர்
**ந.இரத்தினபூரணம்**
பிறப்பு 30.09.1931 இறப்பு 02.05.2016



அமரர்
**ந.தயாபரன்**
பிறப்பு 09.08.1975 இறப்பு 11.01.2011

தந்தையென வந்து வாய்த்த ஆசைத் திருவுருவே
அன்பாய் நல் அறிவும் ஊட்டி வாழும் வகை காட்டி நின்றீர்

நீறாகிப் போனீரென நினைப்பதற்கு இயலவில்லை
பேறாகப் பெற்ற பெருந்தகையே தாயே!

வேற்று நாட்டில் மாண்டாலும் தம்பியே!
மாறாது நம் மனதில் மதிப்பான உமதுருவம்

நல்லதம்பி வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

(cr 37886) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தில் ஒருமித்த நிலைப்பாடு இல்லை

**யாழ்ப்பாணம், ஏப். 25**

**தற்போதைய நெருக்கடி நிலைமையில் தமிழ் மக்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் ஆராயும் தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தில் நேற்றுக் குழப்பம் ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. தமிழ்க் கட்சிகளால் தயாரிக்கப்படும் வரைவுடன் உடன்பாடில்லை எனத் தெரிவித்து திருமதி அனந்தி சசிதரன் மற்றும் வேலன் சுவாமிகள் ஆகியோர் வெளிநடப்புச் செய்துள்ளனர்.**

தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் தென்னிலங்கை போராட்டங்கள் தொடர்பில் தமிழ் மக்கள் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் அண்மையில் கலந்துரையாடல் நடத்தியிருந்தன. அதன் தொடர்ச்சியான கலந்துரையாடல் நேற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் காலை 9.30 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணி வரை நடைபெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் வீ.ஆனந்தசங்கரி, புளொட் சார்பில் த.சித்தார்த்தன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன், ரெலோ சார்பில் விந்தன் கனகரட்ணம், தமிழ்த் தேசியக் கட்சி சார்பில் ந.சிறீகாந்தா, தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் சார்பில் பொ.ஐங்கரநேசன், ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் சார்பில் திருமதி அனந்தி சசிதரன், சிவில் சமூக இயக்கத்தின் சார்பில் வேலன் சுவாமிகள், திருகோணமலை சிவில் சமூக அமைப்பு சார்பில் நிக்லஸ் ரமேஸ், கமலகாந்தன், அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒழிப்பு மற்றும் 19ஆம் திருத்தச் சட்டம் மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவரல் ஆகிய விடயங்கள் தொடர்பில் கூட்டத்தில் கலந்து கொண்ட பலர் இணக்கப்பாடு வெளியிட்டனர். ஆனால் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி இயக்கத்தின் சார்பில் கலந்து கொண்ட வேலன் சுவாமிகள் உடன்படவில்லை.

புதிய அரசமைப்பில் சமஷ்டித் தீர்வைக் கோருவதையும் அவர் ஆதரிக்கவில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்க ஒத்துழைக்க முடியாது என்றும் சர்வதேச நாடுகளின் உதவியுடன் வடக்கு - கிழக்கில் பொதுசன வாக்கெடுப்பு நடத்தி வெளியக சுயநிர்ணயத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும் அது வரை இடைக்கால தன்னாட்சி அதிகார சபை நிறுவவேண்டும் என கருத்து வெளியிட்டார். இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான கருத்தை விக்னேஸ்வரனும் வலியுறுத்தினார்.

ஆனால் இந்தக் கருத்துடன் பெரும்பாலானோர் உடன்படவில்லை.

இதேவேளை, திருமதி அனந்தி சசிதரன், காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் அரசியல் கைதிகள் விவகாரங்கள் பற்றி குறிப்பிட்டார். அதேபோல பொறுப்புக்கூறல், சிங்கள மயமாக்கல் விடயங்களையும் தெரிவித்தார். இப்போது இந்த விடயங்களை ஆராய்வது பொருத்தமற்றதாக இருக்கும் என்ற கருத்தும் ஏனையோரால் முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையில், புதிய அரசமைப்பில் சமஷ்டி உள்ளடக்கப்பட வேண்டும் என்று சாரப்பட கடிதம் வரைவது என்றும் தீர்மானிக்கப்பட்டு அதன் பொறுப்பு ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமசந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-5)




## யாழ். பிராந்தியத்துக்கு அமெரிக்கா உதவும்

*பலாலியில் வந்திறங்கிய தூதுவர் ருவிற்றரில் பதிவு*

யாழ்ப்பாணம், ஏப். 25

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்ட ஜூலி ஜே சங் முதல் தடவையாக நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

பலாலியிலுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய அவர் அங்கிருந்து யாழ். நகரிலுள்ள தனியார் விடுதிக்குச் சென்றார். தனது யாழ்ப்பாணப் பயணம் தொடர்பில் அவர் ருவிற்றரில் பதிவிட்டுள்ளார்.

அதில் யாழ்ப்பாணப் பிராந்தியத்துக்கு அமெரிக்கா உதவும் என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ-5)

## நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு திரட்டும் முயற்சி தீவிரம்!

*சுயாதீன குழுக்களுடன் சஜித் அணி பேச்சு*

கொழும்பு, ஏப். 25

பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளடங்கலான அரசுக்கு எதிராக ஓரணியில் திரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கும், நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் அணிகளுக்கும் இடையில் பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையிலான குழுவினர், சுயாதீன அணிகளின் தலைவர்கள் மற்றும் முக்கிய உறுப்பினர்களை சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடி வருகின்றனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளடங்கலான அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதற்கு தயாராகிவரும் ஐக்கிய மக்கள் சக்தி, தற்போது அதற்கான ஆவணத்தில் கையொப்பம் திரட்டிவருகின்றது.

அந்தப் பிரேரணையின் உள்ளடக்கங்கள் தொடர்பில் தமக்கு தெரியப்படுத்தப்படாததால், ஆதரவு வழங்கும் முடிவை எடுக்கவில்லை என சுதந்திரக்கட்சி உட்பட சுயாதீன அணிகள் அறிவித்தன. பிரதமர் பதவி விலகி சர்வகட்சி அரசு அமைக்க இடமளிக்காவிட்டால், தாமும் நம்பிக்கையில்லாப் பிரேரணயை கொண்டுவரத் தயார் எனவும் குறிப்பிட்டன.

இந்நிலையிலேயே பிரேரணையின் உள்ளடக்கங்கள் பற்றியும், சுயாதீன அணிகளின் யோசனைகளையும் உள்வாங்கும் நடவடிக்கையை ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பித்துள்ளது. (ஒ-44)

## மஹிந்த விலகுவதைத்தவிர வேறுவழி எதுவும் இல்லை

*டலஸ் அழகப்பெரும மீண்டும் தெரிவிப்பு*



கொழும்பு, ஏப். 25

பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலகுவதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை. இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் நெருங்கிய சகாவுமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

பிரதமர் பதவியில் தான் தொடர்ந்து நீடிப்பார் என்றும், இடைக்கால அரசு அமைந்தால்கூட அதுவும் தனது தலைமையிலேயே மலரும் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்று முன்தினம் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். பிரதமரின் இந்தக்கருத்து தொடர்பில் முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவிடம் கேட்டபோது;

பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிகளால் நாடு பேரவலத்தைச் சந்தித்துள்ளது. எனவே, பிரதமர் மஹிந்த ராஜபக்சவும், அவர் தலைமையிலான அமைச்சரவையும் உடனடியாகப் பதவி விலகி அனைத்துக் கட்சிகளின் பங்களிப்புடன் இடைக்கால அரசு அமைய வழிவிட வேண்டும். பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலகுவதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை. எனவே, பழுத்த அரசியல்வாதியான அவர் எமது கோரிக்கையை ஏற்பார் என்று இன்னமும் நம்புகின்றோம்- என்றார். (ஒ-22)

## வரிசையில் நின்றோருக்கு இலவசமாக அரிசி வாங்கிக் கொடுத்த சுற்றுலாவி!

கொழும்பு, ஏப். 25

இலங்கைக்கு வந்துள்ள இஸ்ரேலிய சுற்றுலா பயணியொருவர், அரிசி வாங்க வரிசையில் நின்ற மக்களுக்கு தனது செலவில் அரிசி வாங்கிக் கொடுத்த சம்பவம் வெலிகம பகுதியில் இடம்பெற்றுள்ளது. வெலிகமவிலுள்ள சதொச விற்பனை நிலையத்தில் அரிசி வாங்க மக்கள் வரிசையில் நின்றுள்ளனர். 210 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் அரிசி, சதொச நிறுவனத்தில் 110 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக பரவிய தகவலையடுத்து, ஏராளமான மக்கள் கொளுத்தும் வெயிலில் வரிசையில் நின்றுள்ளனர்.

இஸ்ரேலில் இருந்து இலங்கை வந்துள்ள சுற்றுலாப் பயணியான கிரே ரோசம்பிரக் அந்த வழியால் காரில் சென்றுகொண்டிருந்தபோது, வரிசையை கவனித்து, அது பற்றி விசாரித்துள்ளார். அரிசி வாங்க வரிசையில் நிற்கிறார்கள் என்பதை தெரிந்ததும், அங்கு வரிசையில் நின்ற 129 பேருக்கு தலா 5 கிலோ அரிசியை கையளித்ததுடன் மருந்து வாங்க வந்தவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபாவும் வழங்கினார். (ஒ-இ)

## ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைப்பு: அமைச்சரவைக் கூட்டத்தில் இன்று ஆராய்வு

*சபாநாயகர் தலைமையிலும் கூட்டம்*

கொழும்பு, ஏப். 25

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்களை மட்டுப்படுத்துவது தொடர்பில் இன்று நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவுள்ளது என்று அறிய முடிகின்றது. புதிய அமைச்சரவை பதவியேற்ற பின்னர், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் இன்று முதலாவது அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இதன்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்களை மட்டுப்படுத்துவது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டு, அதற்கான அமைச்சரவை பத்திரம் இறுதிப்படுத்தப்படவுள்ளது. அதன்பின்னர் எதிர்வரும் 28ஆம் திகதி சபாநாயகர் தலைமையில் நடைபெறவுள்ள விசேட கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது தொடர்பில் ஆராயப்படவுள்ளது. அமைச்சரவையில் இறுதிப்படுத்தப்பட்ட பிரேரணை கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளது. (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்தடையை சாதகமாக்கி வீட்டில் பணம் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப். 25

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுவில் ஆலடிப் பகுதியில் உள்ள வீட்டில் மின்சாரம் தடைப்பட்டு இருந்தவேளை திருட்டு இடம்பெற்றுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் வைக்கப்பட்டிருந்த 30 ஆயிரம் ரூபா பணம், ஸ்மார்ட் கையடக்கத்தெலைபேசி மற்றும் இரண்டு தேசிய அடையாள அட்டைகள் என்பன மின்தடை நேரத்தில் திருடப்பட்ட விடயம் மீண்டும் மின்சாரம் வந்தபோதே வீட்டு உரிமையாளருக்கு தெரியவந்துள்ளது.

இதையடுத்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் வீட்டின் உரிமையாளரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ-125)

### மின் தடை நேரத்தில்

## ஆலயத்தில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப். 25

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லுண்டாயில் ஆலயத்தின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. நேற்று இரவு 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலையில் பணியாற்றும் இளைஞன், கல்லுண்டாய் வைரவர் ஆலயத்துக்கு முன்பாக மோட்டார் சைக்கிளை இயங்கு நிலையில் விட்டு வழிபடச் சென்றுள்ளார். இந்த நிலையில் வீதியால் வந்த நபர் ஒருவர் மோட்டார் சைக்கிளை திருடிச் சென்றுள்ளார். திருட்டு இடம்பெற்ற நேரத்தில் அந்தப் பகுதியில் மின்சாரம் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-125)

## பாதுகாப்பு அமைச்சரின் வீட்டை சுற்றிவளைத்து நேற்று போராட்டம்

கொழும்பு, ஏப். 25

ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கோரியும் தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராகவும் மினுவாங்கொடை உடுகம்பொல புனித பிரான்சிஸ் தேவாலயத்தில் இருந்து நேற்று ஊர்வலமும் வாகனப்பேரணியும் ஆரம்பமானது.

போராட்டக்காரர்கள் மினுவாங்கொடையை வந்தடைந்ததையடுத்து, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வீட்டுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஒ-இ)

### இலங்கையின்...

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட ராஜபக்ச அரசு கூண்டோடு பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி நாடெங்கும் மக்கள் போராட்டங்கள் வலுவடைந்து வருகின்றன. அதனிடையே பிரதமர் மஹிந்த ராஜபக்ச உடன் பதவி விலகி சர்வகட்சிகள் அடங்கிய இடைக்கால அரசு அமைய வழிவிட வேண்டும் என்ற முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் கோரிக்கையும் ஆளும் கட்சிக்குள் பெரும் புயலாக மாறியுள்ளது.

இந்நிலையில், பிரதமர் பதவியில் தான் தொடர்ந்து நீடிப்பார் என்றும், இடைக்கால அரசு அமைந்தால்கூட அதுவும் தனது தலைமையிலேயே மலரும் என்றும் நேற்றுமுன்தினம் திட்டவட்டமாக அறிவித்திருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நேற்று இரவு திடீரென 'இலங்கை அரசியலில் எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற நிலை தற்போது உருவாகியுள்ளது' என்று கூறியுள்ளார்.

கொழும்புச் செய்தியாளர் ஒருவருக்கு நேற்று வழங்கிய குறுகிய செவ்வியில் இவ்வாறு கூறினார்.

'எனக்குப் பதவி ஆசை இல்லை. ஆனால், என்னைக் குறிவைத்து சிலர் ஏன் பதவி விலகக் கோருகின்றனர் என்று எனக்குப் புரியவில்லை. எனினும், அவர்களின் குறுகிய கால சுயலாப அரசியல் எனக்குப் புரிகின்றது.

இலங்கை அரசியலில் எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற நிலை தற்போது உருவாகியுள்ளது. எனினும், தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு நான் பொறுப்பு அல்ல. அரசுக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்க வேண்டிய நிலைமைக்கும் நான் காரணம் அல்ல. மக்களின் துயரங்களை நான் புரிந்துகொள்கின்றேன். எப்போதும் மக்கள் பக்கமே நான் நிற்பேன். மக்களின் மனநிலையை அறிந்துதான் ஒவ்வொருகட்ட நடவடிக்கையையும் நான் எடுத்து வருகின்றேன்' என்றார் பிரதமர் மஹிந்த.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ச, பிரதமர் பதவியில் நீடிக்க வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று ஆளுங்கட்சிக்குள் கையொப்பம் பெறும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதில் நேற்று இரவு வரை 50 பேர் வரையான நாடாளுமன்ற உறுப்பினர்களே கையொப்பம் இட்டுள்ளனர்.

அத்துடன் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்று பிரதமர் மஹிந்தவைச் சந்திக்க முயன்றனர். எனினும், அவர் தங்காலை சென்றுவிட்டார்.

இந்நிலையில், புதிய அமைச்சரவையின் இன்றைய முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த கலந்துகொள்வாரா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் இன்று நடைபெறுவதற்கு முன்னர், அதாவது இன்று மாலைக்குள் 113 பேருக்கு மேற்பட்டோர் கையொப்பமிட்டு, பிரதமராக மஹிந்த நீடிக்க ஆதரவு என்று ஜனாதிபதி கோத்தாபயவிடம் கடிதம் சமர்ப்பிக்க முயற்சி எடுக்கப்படுகின்றது.

இந்த முயற்சி சாத்தியப்படாத பட்சத்தில் பிரதமர் மஹிந்த பதவி துறக்கக்கூடும் என்று அரசியல்வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-22)

### கோத்தாவுக்கு...





பாதுகாப்பு வழங்கப்பட்ட நிலையில், அதை நோக்கிப் பேரணி செல்வது தடுத்து நிறுத்தப்பட்டிருந்த நிலையில், போராட்டக்காரர்கள் திடீரென விஜேராம மாவத்தையிலுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் இல்லத்தை முற்றுகையிட்டனர். அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்படவிருந்தது. கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து புறப்படும் பேரணி, ஜனாதிபதி செயலகம் அருகிலுள்ள 'கோத்தாகோகம'வை சென்றடையும் என்று திட்டமிடப்பட்டிருந்தது. நீதிமன்றத் தடையுத்தரவைப் பெற்ற பொலிஸார் வீதித் தடைகளை அமைத்திருந்தனர். இதனால் போராட்டக்காரர்கள் திடீரென, மாற்று வழியூடாக விஜேராம மாவத்தை நோக்கி முன்னேறிச் சென்றனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் வீட்டின் முன்பாக சுமார் பல ஆயிரக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் திரண்டு கோஷம் எழுப்பினர். வீட்டின் வாயிலில் அமைக்கப்பட்டிருந்த வேலிகளை தகர்த்து உள்நுழைவதற்கு போராட்டக்காரர்கள் முயற்சித்தனர். விசேட அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டு அந்த முயற்சி தடுக்கப்பட்டது. இதன்போது போராட்டக்காரர்களுக்கும் படையினருக்கும் இடையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

பிரதமரின் வீட்டின் முன்பாகவுள்ள வீதியை மறித்து போராட்டக்காரர்கள் அமர்ந்திருந்தனர். இதன்போது வெள்ளை நிறத்திலான பிரதமரின் வீட்டுச் சுவரில், போராட்ட வாசகங்களை எழுதினர்.

'கொலைக்கார கோத்தா வீட்டுக்குப் போ', 'அன்று ரத்துபஸ்வல இன்று ரம்புக்கன', '225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வேண்டாம்' ஆகிய வாசகங்களையும் எழுதினர்.

அதன் பின்னர் நேற்று இரவு 6 மணியளவில் காலிமுகத்திடலுக்கான வீதித் தடைகள் அகற்றப்பட்டமையால், பிரதமரின் இல்லத்திலிருந்து காலிமுகத்திடல் நோக்கி மாணவர்கள் பேரணியாகச் சென்றனர். அ-ஒ-5)

### அதிபர்...

கிழமை பாடசாலைக்கு சமுகமளிக்கமாட்டார்கள். இன்றைய தினம் பிள்ளைகளின் பாதுகாப்பு குறித்து பெற்றோர் அக்கறையுடன் செயற்படுமாறும் இன்றைய பொருளாதார நெருக்கடியுள்ள சூழலில் வீணான சிரமங்களைத் தவிர்க்குமாறும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் ஆ.தீபன் திலீசன் கோரியுள்ளார். (ஒ-7)

### வடக்கு மாகாண...

பரீட்சைகளை வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் ஒத்திவைத்துள்ளது.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் 2021ஆம் ஆண்டு தரம் 6, 7 மற்றும் 8ஆம் தர மாணவர்களுக்கான மூன்றாம் தவணைப் பரீட்சை நடத்தப்பட்டு வருகிறது. இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த பரீட்சைகள் நாளை மறுதினம் புதன்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். கடந்த 20ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை நாளை செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் அன்றைய தினம் நடைபெறும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-ஒ-இ)

## இந்தியாவுக்கு செல்லமுயன்றோர் மன்னாரில் கைது

மன்னார், ஏப். 25

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் வசிக்க முடியாத நிலையில் இந்தியாவுக்குதப்பிச்செல்வதற்காக முயற்சித்த இரு குடும்பங்களைச் சேர்ந்த 7 பேரை நேற்றைய தினம் பேசாலை பொலிஸார் கைது செய்துள்ளனர். மன்னார் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ஒ-213)

### தமிழ் ஈழ...

படுத்திக் கொள்ளும் குழுவால் இணையத்தளம் ஹக் செய்யப்பட்டது. (அ-ஒ)

### விளைவுகள்..

கள் ஏற்படுவதற்கான அபாயம் நிலவுகின்றமை தொடர்பில் தாம் கவனம் செலுத்தியுள்ளதாக சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்ப்பில் ஈடுபடுபவர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அமைதியாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கும் சுதந்திரமாக நடமாடுவதற்கும் உள்ள மக்களின் உரிமையை பாதுகாப்பதற்கு பொலிஸ்மா அதிபர், பொலிஸார் மற்றும் படையினர் எந்தவொரு நிலைமையிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஏதேனும் வன்முறையான சூழல் ஏற்பட்டால் அது நாட்டுக்கு மிகப் பெரிய விபரீதங்களை ஏற்படுத்தக்கூடும் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






காலிமுகத்திடலில் நேற்று 16ஆவது நாளாகவும் போராட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. நேற்றைய தினம் தமிழர்களின் பாரம்பரிய இசைக்கருவிகளில் ஒன்றான பறை அடிக்கப்பட்டு போராட்டக்கோஷங்கள் எழுப்பப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ-இ)




# சுனாமியாலேயே இறந்தாராம் பிரபாகரன்

### பெரும்பான்மை இனத்தவர் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஏப். 25

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி இடரில் தான் பிரபாகரன் இறந்தார். அவர் போரில் இறக்கவில்லை என்று காலி முகத்திடல் போராட்டக்களத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நபரொருவர் தெரிவித்துள்ளார்.

காலிமுகத்திடலில் இடம்பெறும் போராட்டத்துக்கு வந்த நீல் என்ற குறித்த நபர், 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி இடரால்தான் பிரபாகரன் இறந்தார். அவர் இறுதிப்போரின்போது நந்திக்கடலில் இறக்கவில்லை. பிரபாகரனைப்போன்ற ஒருவர் இறந்ததையே பிரபாகரன் இறந்ததாகக் காட்டினார்கள். திருடர்கள் ஹீரோவாக முடியாது, ஹீரோக்கள் திருடர்களாக இருக்கமாட்டார்கள் என்று எழுதப்பட்ட பதாகையை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டார். (ம)

# போராட்டத்தை ஆதரிப்பதுபற்றி தமிழர்களுக்கு நன்கு தெரியும்

## எவரும் சொல்லித்தர வேண்டியதில்லை சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

**வவுனியா, ஏப். 25**

**போராட்டம் ஒன்றை எப்படி, எந்தச் சந்தர்ப்பத்தில் ஆதரிக்க வேண்டும் என்பது தொடர்பாக தமிழ் மக்களுக்கு யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்பதில்லை. ஆனால், கோத்தாபயவுக்கு எதிரான சிங்கள மக்களின் போராட்டத்தில் தமிழ் மக்கள் நேரடியாக ஆதரவு கொடுக்க வேண்டுமென யாருமே எதிர்பார்க்கக்கூடாது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.**

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி யாகப் பதவியேற்றபோது சிங்கள மக்களிடம் இருந்த எதிர்பார்ப்பு அடுத்த ஓரிரு ஆண்டுகளிலேயே இல்லாமற்போயுள் ளது.

பொதுஜன பெரமுனவின் அரசாங்கத்துக்குள் முரண்பாடுகளும் மேலோங்கியுள்ளன. 69 லட்சம் சிங்கள மக்களுடைய வாக்குகளில் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி யாகப் பதவியேற்றிருந்தார். இவருடைய ஆட்சி நீடித்து நிலைக்க வாய்ப்பில்லை என்பது முற்போக் கான சிங்கள மக்களுக்கு ஏற்கனவே தெரிந்ததே.

கோத்தாபயவுக்கு வாக்களித்த மக்கள் தான் இன்று அவரை வீட்டுக் குப்போ என்று குரல் எழுப்புகின்றனர்.

ஆகவே ஊழல் மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் மாத்திரமல்ல பொருளாதார நெருக்கடிக்கான மூலத்தை இனிமேலாவது சிங்கள மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வுக்கு எதிரான சிங்கள மக்களின் போராட்டம் நியாயமா னது.

அந்தப் போராட்டத்தை தமிழ் மக்கள் ஆதரிப்பார்கள். ஏனெனில் முப்பது ஆண்டுகாலப் போரின்போதும், போரின் பின்னரும் வடக்கு- கிழக்குத் தமிழர்கள் எதிர்கொண்ட இன்னல்கள் மிகப் பெரியன.

எனினும், போராட்டம் ஒன்றை எப்படி எந்தச்சந்தர்ப்பத்தில் ஆதரிக்க வேண்டும்? என்பது தொடர்பாகத் தமிழ் மக்களுக்கு யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்பதில்லை. ஆனால், கோத்தாபயவுக்கு எதிரான சிங்கள மக்களின் போராட்டத்தில் தமிழ்மக்கள் நேரடியாக ஆதரவு கொடுக்கவேண்டுமென யாருமே எதிர்பார்க்கக்கூடாது.

ஏனெனில் டீசல், எரிவாயு, பெற்றோல் விலைகள் குறைவடைந்து அவை வழமைபோன்று இலகு வாகக் கிடைத்துவிட்டால், அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைகள் குறைவடைந்து நிலைமை வழமைக்குத் திரும்பிவிட்டால், தற்போது வீதியில் நின்று போராடும் சிங்கள மக்கள் வீட்டுக்குச் சென்று விடுவார்கள்.

சிங்களவர்களுடைய பிரச்சினை முடிவுக்கு வந்துவிடும். ஆனால் தமிழர்களின் பிரச்சினைகள் அவ்வாறல்ல - என்றார். (ம)

வேலையாள்கள் தேவை
யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.
• சமையல் உதவியாளர் • காசாளர்
• Delivery boy • உணவு பரிமாறுபவர்
ஆண், பெண் இருபாலாரும் தேவை.
சம்பளம் பேசித் தீர்க்கப்படும்
077 314 7580

பொதிகள் சேவை
உள்நாடு, வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை.
❖வெளிநாடு:- 5-7 நாட்கள்
❖உள்நாடு:- 24 மணித்தியாலயம்
} ஒப்படைக்கப்படும்
(CS 19489) (4/6)
திருமுருகன் கொம்நெற் 077 755 4528
Over 11 kg UK-1350.00
இல.321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

STUDENT VISA – 2022
1) Child education 5–17 years (both parent can go with the children)
2) Student Visa with the work
a. Canada UK – IELTS (6 – 6.5) and Australia
b. Europe Countries (Germany,Swiss,Italy.France etc…)
IELTS. தேவையில்லை.
Intake Sep/January
Application now in process - Register now
Minimum qualifications – A/L
வேலையுடன் கூடிய கற்கை நெறியினை தொடர விரும்புபவர்கள்
கீழ் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது சுயவிபரக்கோவையை அனுப்பவும்.
Visa Consultant:-
Adiyapatham Road, Thirunelvely, Jaffna. - T.P: 0770385584 - Email Id: naltejaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.